எழுந்து ஒளி வீசு

# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் – 58
விலை ரூபாய் 30.00

தீபம்–58 | வைகாசி இதழ் – 2019,
ஆரம்பம் 15 மாசி - 2013

திருமறைக்கல்வி நிலையம்,
இல: 297, கடற்படைத்தள வீதி, திருகோணமலை.

E-mail : catetcota@gmail.com
T.P : 026 2221022, 026 2054362

**ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது. (தி. பா 116:15)**

Congratulations



அதிவண ஆயர். J. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை
36வது ஆயர்த்துவ நினைவு நாள்
07 வைகாசி 1983




அதிவண ஆயர். C. நோயல் இம்மானுவேல்
33வது குருத்துவ நினைவு நாள்
21 வைகாசி 1986



அதிவண ஆயர். பொன்னையா ஜோசப்
11வது ஆயர்த்துவ நினைவு நாள்
24 வைகாசி 2008

**செபிப்போம்
வாழ்த்துவோம்**

## ஆழ்ந்த அனுதாபங்கள்



உயிர்த்த ஞாயிறு தினத்தன்று (21.04.2019) இலங்கையே ஆட்டம் காண வைத்த கோரச் சம்பவத்தினால் தங்கள் உயிரான தம் உறவுகளை இழந்து ஆறாத துயரில் ஆழ்ந்து கொண்டிருக்கும் அனைத்து உள்ளங்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதேவேளை அச்சம்பவத்தில் காயமடைந்து வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வரும் அனைவரும் விரைவில் சுகம் பெறவும் இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

திரு அவையினர், பொதுநிலையினர்
திருகோணமலை மறைமாவட்டம்

## இயேசுவோடு 12 மணி நேரம் விசேட நற்கருணை ஆராதனை

இடம் : கிறிஸ்து அரசர் ஆலயம்
கன்னியா

காலம் : 04. 05. 2019
( சனிக்கிழமை)

நேரம் : மதியம் 12 மணி முதல்
இரவு 12 மணி வரை



இடம் : புனித அந்தோனியார் ஆலயம்,
மூதூர்

காலம் : 01. 06. 2019
( சனிக்கிழமை)

நேரம் : மதியம் 12 மணி முதல்
இரவு 12 மணி வரை

திருகோணமலை மறைமாவட்டத்
திருச்சபையாக செபத்தில் இணைந்து
கொண்டவர்களுக்கு நன்றிகள்

திருகோணமலை மறைமாவட்டத் திருச்சபையாக
செபத்தில் இணைந்திடுவோம்.

## வழிபாடுகளின் போது நடாத்தப்படும் தாக்குதல்கள் வெட்கத்துக்குரியவை




இலங்கை தாக்குதல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக தமிழகத்தில் கண்டன ஊர்வலம் (AFP or licensors)

ஏப்ரல் 21, இயேசுவின் உயிர்ப்பு ஞாயிறு காலையில், இலங்கையில் அப்பாவி மக்கள் மீது நடாத்தப்பட்ட கொடூரமான தாக்குதல்களில் உயிரிழந்தவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு திருப்பீடத்தின் செபங்களையும் ஒருமைப்பாட்டுணர்வையும் மீண்டும் தெரிவிப்பதாக பேராயர் பெர்னாதித்தோ அவுசா அவர்கள் கூறியதோடு இவ்வாறான தாக்குதல்கள் வெட்கத்திற்குரியனவும் கண்டனத்துக்குரியன எனவும் கூறினார். தாக்குதல்கள் நடைபெற்ற அன்றே தனது செபங்களையும், ஒருமைப்பாட்டுணர்வையும் தெரிவித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பெயரில், ஆழமான மனித மற்றும் ஆன்மீக நெருக்கம் நிறைந்த அவரின் வார்த்தைகளாளேயே எனது செபங்களைத் தெரிவிக்கிறேன் எனவும் கூறினார்.

ஆதாரம் : வத்திக்கான் வானொலி

## ஆழ்ந்த அனுதாபங்கள்



அமரர். அருட்பணி. ஜே. எஸ். ஜீவணதாஸ் பெர்ணாண்டோ. அ. ம. தி அவர்கள் 16.04.2019 அன்று காலமானார். அன்னார். திருகோணமலை மறைமாவட்டத்தில் பாலையூற்று புனித லூர்து அன்னை திருத்தலத்தில் பங்குத்தந்தையாகவும், மரியாயின் சேனை சபைக்கு ஆன்மீக இயக்குனராகவும். தி/புனித சூசையப்பர் கல்லூரி (தேசிய பாடசாலை) அதிபராகவும் பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அடிகளாரின் மறைவால் துயருற்றிருக்கும் அனைத்து உள்ளங்களுக்கும் திருமலைத்தீபம் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது. (லூக் 1: 47)**

## சுயவிழிப்புணர்வுத் தொடர் - 03



# இன்னுமா தயக்கம்!

இறை இயேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே! திருமலை தீபம் இதழ் வாயிலாக மீண்டும் உங்களை சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். சென்ற இதழில் அனுபவங்கள் வழி வருகின்ற அறிவே நிலைத்த உறுதியான மற்றும் உபயோகமான அறிவு என்பதைப் பார்த்தோம். இந்த அனுபவங்களைப் பெறுவதே இன்று மிகப் பெரிய சவாலாக இருக்கின்றது. இந்த நேரத்தில் விவிலியத்திலும் கிறிஸ்தவப் பாரம்பரியத்திலும் கூறப்பட்ட சில அனுபவங்களை சற்று உற்றுநோக்குவோம்.

ஆண்டவர் இயேசு விவிலியத்தில் பல இறையனுபவங்களை வெளிப்படுத்துகின்றார். அவர் திருமுழுக்கு பெறும் வேளையில் வானம் திறந்து கடவுளின் ஆவியானவர் புறாவைப் போல அவர் மீது வந்திறங்கினார். மேகத்தினின்று "இவரே என் அன்பார்ந்த மகன், இவரிடம் நான் பூரிப்படைகிறேன்! என்ற குரலொலி கேட்டது. இது ஆண்டவர் இயேசுவை முன்னிட்டு அவரைச் சுற்றியிருந்த மக்களுக்கு இறைவன் அருளிய ஒரு அனுபவம். இந்த அனுபவத்தைப் பார்த்து அவர் மீது பலர் நம்பிக்கை கொண்டனர். அது போல தாபோர் மலையில் அவர் உருமாற்றம் அடைந்ததும் ஒரு இறையனுபவம். அங்கும் மேகத்தின் மீதிருந்து ஒரு குரலொலி கேட்கின்றது. இதைப் போன்று இயேசு கடல் மீது நடந்தது, நோய்களைக் குணமாக்கியது என்று பல அனுபவங்களை சீடர்கள் பார்த்திருந்தார்கள். இயேசுவின் அனுபவத்திற்குப் பிறகு நாம் திருத்தூதர்களின் அனுபவங்களைப் பார்க்கின்றோம். அவர்கள் தங்கள் மொழியில் பேசுவதை மக்கள் தத்தம் மொழியில் கேட்டு இறைவார்த்தையைப் புரிந்து கொண்டார்கள். அவர்கள் பிணியாளர்கள் மேல் கைகளை வைக்க அவர்கள் குணமானார்கள். சவுலாயிருந்த பவுல் தமஸ்குவுக்கு செல்லும் வழியில் ஆண்டவர் இயேசுவை எதிர்கொள்கின்றார், அவரது கண்கள் குருடாகி பின்னர் அனனியாவின் ஜெபத்தால் பார்வையை மீட்டெடுக்கிறார். இதுபோன்ற திருத்தூதர்களின் அனுபவங்களுக்குப் பின் கிறிஸ்தவர்களை ஊக்குவிக்க புனிதர்களின் அனுபவங்களைப் பார்க்கிறோம். ஒவ்வொரு புனிதரும் வித்தியாசமான அனுபவங்களையே தங்கள் வாழ்வில் பகிர்ந்து கொள்கின்றார்கள். இறைவனின் செய்தி ஒவ்வொருவருக்கும் புதுமையான விதத்தில் கொடுக்கப்படுகின்றது. அதை அவர்கள் பார்த்து புதிய ஞானமும் தெம்பும் பெற்றவர்களாயினர்.

விவிலியத்தில் ஆண்டவர் இயேசு தவிர மற்ற அனைவருமே தங்கள் அனுபவத்தின் வாயிலாக புதிய ஞானத்தைப் பெற்று அதை இறைமக்களுக்கு அறிவிக்கின்றார்கள். அவர்கள் அறிவித்த தங்கள் அனுபவமே நாம் பெற்றுக் கொண்ட இறைசெய்தியாக இருக்கின்றது. பழைய ஏற்பாடு துவங்கி புதிய ஏற்பாட்டிலிருந்து புனிதர்கள் வரை ஒவ்வொருவரும் தங்களுக்கு இறைவன் தந்த அனுபவங்களை இறைமக்களுக்கு இறை செய்தியாக தருகின்றார்கள்.

இதில் மிக முக்கியமாக கவனிக்க வேண்டிய ஒரு செய்தி ஒன்று உண்டு. அது என்னவென்றால் ஒருவருக்கு கொடுக்கப்பட்ட அனுபவம், இன்னொருவருக்கு கொடுக்கப்படவில்லை. ஒரு காலகட்டத்தில் அவர்கள் பெற்ற அனுபவம், அவர்களுக்கு மீண்டும் கிடைக்கவே இல்லை. ஏனென்றால் இறையனுபவம் ஒவ்வொருவருக்கும் புதிது புதிதாகவே கொடுக்கப்படுகின்றது. ஒரு முறை கொடுக்கப்பட்ட அனுபவம் இன்னொரு முறை கொடுக்கப்படுவதில்லை. எனவே வேறு ஒருவருக்குக் கொடுக்கப்பட்ட அனுபவம் எனக்கு நிச்சயமாக கிடைக்காது. எனக்குக் கிடைக்கும் அனுபவம், வேறு ஒருவருக்கு நிச்சயமாக கிடைக்காது. இறைவன், தான் உருவாக்கும் உயிர்களிலும் சரி, கொடுக்கும் அனுபவங்களிலும் சரி, எப்போதும் புதுமையாகவே செயல்படுகின்றார். எனவே தான், இந்த உலகில் ஒரு சிறு இலை கூட வேறொரு இலை போல இல்லை. இந்த உலகில் பல கோடி மனிதர்கள் இருக்கின்றார்கள். ஒருவரைப் போல இன்னொருவர் நிச்சயமாக இல்லை. இதுவே இறைவனின் படைப்பு.

எனவே தொடக்க கால கிறிஸ்தவர்களின் அனுபவம் கிடைத்தால் தான் தூய ஆவியானவர் கொடுக்கப்பட்டுள்ளார், அவர்களைப் போல அன்னிய மொழிகளைப் பேசினால் தான் தூய ஆவியானவர் வருவார் என்று பழைய அனுபவங்களைத் தேடிக் கொண்டு காத்திருந்தால் நிச்சயமாக நாம் எந்த அனுபவத்தையும் பெற முடியாது. காரணம், நாம் ஒரு பழைய அனுபவத்தைத் தேடிக் கொண்டிருக்கும் போது, இறைவன் பல புதிய அனுபவங்களைத் தந்து கொண்டே இருக்கின்றார், ஆனால் பழைய அனுபவத்தைத் தேடிக் கொண்டிருக்கும் நாம் இறைவன் உண்மையில் தந்து கொண்டிருக்கும் புதிய அனுபவங்களை உணர்ந்து கொள்ள தவறிவிடுகின்றோம். அனுபவங்கள் என்பவை நிச்சயமாக அசாதாரணமான நிகழ்வுகளாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பதால் இந்தத் தவறுகள் நடக்கின்றன. உண்மையில் அவை அசாதாரணமான நிகழ்வுகள் தான், ஆனால் நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நிகழ்வு அல்ல.

இந்த உலகில் பல அறிவியல் கூற்றுக்கள் உள்ளன. ஒவ்வொன்றுமே ஒவ்வொரு மனிதனின் தனிப்பட்ட அனுபவங்களிலிருந்தே வந்திருக்கின்றன என்றால் அது மிகையாகாது. அப்பிள் மரத்திலிருந்து பல காலமாக பல பழங்கள் கீழே விழுந்துகொண்டு தான் இருந்தன. ஆனால் அந்தப் பழம் புவிசர்ப்பு விசையால் தான் விழுகின்றது என்பதை சர். ஐசக் நியூட்டன் மட்டும் தான் உணர்ந்தார். பாத்திரத்தில் தண்ணீர் முழுமையாக நிரம்பிவிட்டதென்றால் அதில் ஏதேனும் சிறிய பொருளைப் போட்டால் கூட தண்ணீர் வெளியேறும் என்பதை அனைவரும் பார்த்திருந்தார்கள். ஆனால், ஆர்க்கிமிடிஸ் மட்டும் தான், வெளியேறும் தண்ணீரின் கனஅளவும் பாத்திரத்தில் போடப்பட்ட பொருளின் கனஅளவும் சரிசமமாக இருக்கும் என்பதை உணர்ந்தார். இது போல பல நிகழ்வுகள் நம் வாழ்வில் நடந்து கொண்டே இருந்தாலும் அவை அனுபவங்களாக அமைவதில்லை. இது போன்ற அன்றாட வாழ்வின் நிகழ்வுகளை யார் யார் அனுவங்களாக மாற்றுகின்றார்களோ இவர்களை விஞ்ஞானிகள் என்றழைக்கின்றோம். அறிவியல் உலகில் அவர்கள் விஞ்ஞானிகள் என்றால், ஆன்மீக அனுபவம் பெற்றவர்களை புனிதர்கள் என்றும் ஞானிகள் என்றும் அழைக்கின்றோம். ஒரு மனிதன் இந்த உலகில் வாழத் தேவையான அனைத்து ஞானத்தையும் நிச்சயமாக தன் வாழ்வின் நிகழ்வுகளில் சந்திக்கின்றான். ஆனால் அந்நிகழ்வுகள் அவனுக்குத் தேவையான ஞானத்தைக் கொடுத்ததா?அவற்றிலிருந்து அவன் கற்றுக் கொள்ள வேண்டியதைக் கற்றுக் கொண்டானா? என்பது மிகப்பெரிய கேள்விக்குறியாகவே இருக்கின்றது. வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வுமே நமக்கு ஏதேனும் ஒரு செய்தியைத் தந்துகொண்டு தான் இருக்கின்றது. அதிலிருந்து நாம் பாடங்களைக் கற்றுக் கொள்ளும் போது நாமும் இந்த உலகை சரியாகப் புரிந்து கொண்டு நம் வாழ்வை சரியாக நடத்தும் திறன் பெறுகின்றோம்.

பல வேளைகளில் நாம் நம் வாழ்வையும் நம் வாழ்வில் நடக்கும் நிகழ்வுகளையும் விழிப்புணர்வோடு காணத் தவறிவிடுகின்றோம். எனவே தான் நம் வாழ்வின் அடிப்படை ஞானத்தைக் கூட பெற முடியாமல் தவிக்கின்றோம். இந்த உலகின் பெரும்பாலானவர்கள் இந்தத் தவற்றைத் தொடர்ந்து செய்து கொண்டே தான் இருக்கின்றனர். தங்கள் வாழ்வின் நிகழ்வுகள் மூலம் இறைவன் தரும் செய்திக்குத் தொடர்ந்து பாராமுகம் காட்டிக் கொண்டே இருப்பதால் உண்மையை அறிந்து கொள்ள முடியாமலேயே சென்றுவிடுகின்றார்கள். எனவே தான் இந்த உலகம் முழுவதும் அறியாமையாலும் மாயையாலும் நிரம்பியுள்ளது. எது நன்மையைத் தரும், எது தீமையைத் தரும் என்று அறிந்து கொள்ள முடியாமல் தீமையை நன்மை என்று நம்பி தீமையின் பின் சென்றுகொண்டிருக்கின்றோம். இந்த உலகம் பல்வேறு விதமான கானல் நீர் காட்சிகளால் நிரம்பியுள்ளது. வெளித்தோற்றத்திற்கு ஒன்றாகவும் உண்மையில் வேறொன்றாகவும் உள்ள பலவற்றை நாம் இந்த உலகில் கொண்டிருக்கின்றோம். இவற்றை கானல் நீர் என்று அடையாளம் கண்டுகொள்ளாதவரை அவற்றை நம்பி வாழ்வின் முக்கியமான தருணங்களை இந்தப் பொய்மைக்காக செலவிட்டு இறுதியில் அது உண்மையில்லை என்று அறியாமலேயெ உண்மை மகிழ்வைக் காணாமலேயே சென்றுவிடுகின்றோம். இந்த நிலை மாறவேண்டும். நாம் உண்மை அறிவைப் பெற்றுக் கொண்டு நம் வாழ்வில் கானல் நீர் எவை எவை என்பதைப் பகுத்து அறிய வேண்டும்.

இத்தகைய உண்மையை நமக்குத் தரும் அனுபவங்ளை நாம் ஏன் அறிந்து கொள்ளாமல் மாயையில் தொடர்ந்து விழுந்து கொண்டே இருக்கின்றோம்?இன்று பல இடங்களில் இறையனுபவம் என்று நினைத்துக் கொண்டு தங்களையே ஏமாற்றும் மாயையில் விழுந்து அதையே உண்மை என நம்பி அதன் வழியில் மீண்டும் மீண்டும் தவறானவற்றையே கடைபிடித்து அதையே உண்மை என்று பிறருக்கும் போதித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஏன் இவ்வாறு இவர்கள் தவறானவற்றை அனுபவம் என்று ஏமார்ந்து போகிறார்கள்?

இருப்பதை இருக்கின்றவாறு கண்டு அதை கற்றுக் கொள்வதே அறிவாகும். ஆனால் இருப்பதை விட்டுவிட்டு வேறொன்றாக இது இருந்தால் நன்றாக இருக்கும் என்றெண்ணி, அதை தான் நினைத்தவாறு இருப்பதாக நம்பி, அதைப் பற்றிய எந்த அனுபவத்தையும் ஏற்றுக் கொள்ளாமல் தங்களுக்குள்ளே கற்பனைகளை வளர்த்துக் கொண்டு அந்தக் கற்பனைகளையே வாழ்வாக ஏற்றுக் கொண்டிருப்பதால் மக்கள் மாயைகளில் விழுந்து கொண்டிருக்கின்றார்கள். இதற்குக் காரணம், நம்முடைய நான் என்னும் எண்ணமும் காரணமாகும். பல வேளைகளில், இறையனுபவம் கூட நம் அங்கீகாரத்திற்குரிய பொருளாகி விடுகின்றது. அவனுக்குக் கிடைத்துவிட்டது. இவன் எனக்கும் கிடைத்து விட்டதென கூறுகின்றான். அப்படியானால் எனக்கு கிடைக்க வில்லையென்றால் நான் ஆன்மீகமற்ற மனிதன் என்று எண்ணப்பட்டு விடுவேனோ?இறைவன் என்னை மட்டும் அவனை விட தாழ்ந்தவனாக படைத்துவிட்டானோ? என்ற பயம், எனக்கும் சமூதாயத்தில் ஆன்மீகவாதி என்ற அங்கீகாரம் கிடைக்க வேண்டும் என்ற ஆசை, இதனால் உந்தப்பட்டு, எனக்கு எந்த விதத்திலாவது கண்டிப்பாக கிடைத்துவிட வேண்டும் என்கின்ற நிர்ப்பந்தம், இதனால் நாம் உண்மை அனுபவத்திற்குப் பதிலாக, எது பிறருக்குக் கிடைத்துள்ளதோ, அதுவே எனக்கும் கிடைத்தால் போதும், இறையனுபவம் அப்படித்தான் இருக்கவேண்டும் என்ற எண்ணத்தில் தேடிக் கொண்டிருப்பதால் நாம் உண்மையை அறிந்து கொள்ளத் தவறிவிடுகின்றோம். எனவே நாம் எதிர்பார்ப்பதை நம் அனுபமாக பெற்றுக் கொண்டோம் என்ற கற்பனையை உண்மை என நம்ப ஆரம்பிக்கின்றோம். இது போன்ற கற்பனைகளே இனி வருகின்ற அனுபவங்கள் என்றெண்ணி அந்த கற்பனைகளையே நிதர்சனமாக்கிக் கொண்டு தொடர்ந்து மாயையை உண்மையென நம்பி அதிலேயே ஊறன்று கொண்டிருக்கின்றோம்.

இதற்கு யாராவது மாற்றுக் கருத்து சொல்லும் பட்சத்தில் அவர்களை எதிரிகளாகவும் உண்மையை திரித்துரைப்பவர்களாகவும் நம்மீது பொறாமை கொண்டவர்களாகவும் நாம் பார்க்கின்றோம்.

அன்பார்ந்தவர்களே! ஞானம் நிர்பந்தப்படுத்தி பெற்றுக் கொள்வதல்ல. அது எப்போதும் திறந்திருக்கும் உள்ளத்தில் தானாக ஊற்றெடுக்கும் உயிருள்ள நீர். அது ஆணவத்தால் கட்டுப்படுத்தப்படுவதில்லை. எனவே என் பெயரும் புகழும் காக்கப்படவேண்டும் என்ற எண்ணத்தில் அனுபவங்களை நிர்பந்தித்துக் கொண்டிருந்தால் நாம் மாயைகளையே பெற்றுக் கொள்கின்றோம். எனவே வாழ்வை விடாப்பிடியாக பிடித்துக் கொண்டிருக்க வேண்டும் என நினைப்பவன் அதை இழந்து விடுகின்றான், விட்டுவிடுபவனோ அதை நிறைவாகப் பெற்றுக் கொள்கின்றான் என்று இயேசு கூறுகின்றார். எனவே நம் சிந்தனைகளில் விழிப்புணர்வோடு எந்த நிர்பந்தமும் இல்லாமல் நம் வாழ்வின் அனுபவங்களை எதிர்கொள்வோம், நம்மில் எப்போதும் நிறைந்துள்ள ஆன்மீக அனுபவத்தின் மூலம் ஞானத்தையும் உண்மையான ஆன்மீகத்தையும் பெற்றுக் கொள்வோம்.


மீண்டும் இந்த அனுபவங்களைப் பற்றிய புதிய தேடல்களுடன் உங்களை அடுத்த இதழில் சந்திக்கும் வரை நன்றிகூறி விடைபெறுகின்றோம். நன்றி.

**இறையாசீருடன் அருட்பணி. அலெக்ஸ், க.ச**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் சிறு மலர்கள் என்ற பதிவிலிருந்து...

### ஒவ்வொரு விரலுக்கும் ஒரு செபம்!




1). உங்கள் பெருவிரல் உங்களுக்கு அருகில் உள்ளது. எனவே உங்களுக்கு நெருக்கமானவர்களுக்காக செபிக்க ஆரம்பியுங்கள். நாம் அடிக்கடி நினைவுகூர்கின்ற நபர்கள் இவர்களே. எமது வாழ்வில் நெருங்கிய தொடர்புடையவர்களும் இவர்களே. இவர்களுக்காக செபிப்பது உண்மையில் சுகமான கடமையாகும்.


2). அடுத்து இருப்பது சுட்டுவிரல். இது வழிநடத்துகின்றவர்களை, ஆசிரியர்களை சுட்டி நிற்கின்றது. மற்றவர்களை நல்வழிநடத்த, அவர்களுக்குச் சரியான பாதையை சுட்டிக்காட்டும் இவர்களுக்கு எமது ஆதரவும் உதவியும் அவசியம் தேவை. எனவே இவர்களை என்றும் உங்கள் செபத்தில் நிலைநிறுத்துங்கள்.

3) அடுத்து வருவது நடுவிரல் - நீளமானது அல்லது உயரமானது. இது எம்மை ஆளுகின்றவர்களைக் குறிக்கின்றது. நாட்டின் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், நிர்வாகிகள், தொழிலதிபர்கள் என்று பலர் உள்ளனர். இவர்கள் நாட்டினை அதன் இலக்கு நோக்கி நகர முன்நின்று உழைத்து பொதுமக்களின் அபிப்பிராயங்களை செம்மைப்படுத்துகின்றவர்கள். இவர்களுக்கு இறையாசீர் தேவை. இவர்கள் அனைவருக்காகவும் செபியுங்கள்.

4) நான்காவது மோதிர விரல். இசைக்கருவி மீட்ட கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்களின் கூற்றுப்படி இதுவே பலவீனமான விரல். எனவே சமுதாயத்தில் பலவீனமான அனைவரையும் நினைத்து மன்றாட அழைப்பு. வாழ்க்கையில் பலவிதமான சவால்களுக்கு முகம் கொடுக்கவேண்டியவர்கள், நோயுற்றவர்கள், பொருளாதார வரட்சியில் உழலுவோர், தாரமிழந்து பரிதவிப்போர் என்று பட்டியல் நீளலாம். இவர்களுக்காக இரவு பகலாக மன்றாட கடமைப்பட்டுள்ளோம். அத்துடன் திருமணமான அனைவரையும் செபத்தில் நினைவுகூருவோம்.

5) சின்னி விரல், எல்லாவற்றிலும் சிறிய விரல். பிறர் முன்னிலையிலும் இறை சந்நிதியிலும் நாம் சிறியவர்களே என்றுணர நம்மை அழைக்கும் விரல். கடைசியானோர் முதலாவர் என்ற விவிலிய வாக்கிற்கு ஏற்ப அனைவருக்காகவும் செபித்த பின்னர் எனக்காகச் செபிக்க அழைப்பு. மற்றவர்களுடைய தேவை-களை உணர்ந்தபின்பு என் சொந்த தேவைகளை நன்கு அறிந்து கொள்ள இது வாய்ப்பளிக்கின்றது.

வரலாற்றுக் கொலைகள்



## வரலாற்றுக் கொலைகள்

மாவீரன் அலெக்ஸாண்டர்.
பல நாடுகளை இளமையிலேயே வென்று தனதாக்கியவர்.
உலகம் முழுமையும் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வர உழைத்தவர்.
கடற்கொள்ளையன் ஒருவன் அவர் முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டான்.
பார்த்தவுடன் கோபப்பட்டார்.
இப்படிப்பட்ட கொள்ளைகளைச் செய்ய நீ எப்படித் துணிந்தாய்?
உனக்குத் தூக்குத் தண்டனை விதிக்கிறேன். இழுத்துச் செல்லுங்கள் இவனை...
சாவை நோக்கி இழுத்துச் செல்லப்பட்டவன் கேட்டான்:
சாகப்போகும் எனக்கு ஒரு சந்தேகம்.
மன்னரிடம் கேட்கலாமா?
ம்... கேட்கலாம்.
மாமன்னர்...
நான் ஒரே ஒரு கப்பலை வைத்து,
ஒரு சிலரிடம் இருப்பதை மட்டுமே பிடுங்கிப் பிழைக்கிறேன்.
என்னைக் கொள்ளைக்காரன் என்கிறீர்கள். ஆனால்...
ம்... என்ன ஆனால்...?
நீங்கள் பல கப்பல்களை வைத்துக் கொண்டு
பல நாட்டு வீரர்களைக் கொன்று,
அங்கு இருக்கும் வளங்களைப் பிடுங்குகிறீர்கள்.
கொள்ளையடிக்கிறீர்கள்.
ஆனால் உங்களை எல்லோரும் மாவீரன் என்கிறார்களே...
அது மட்டும் எப்படி?...

உயிர் விடும்போது கத்திக் கொண்டே செத்தான்:
மன்னவன் கொன்றால் வரலாற்று மேடை.
மனிதன் கொன்றால் தூக்கு மேடை.



## பதிப்பாசிரியர் பகிர்வு



அருட்பணியாளர். T. கிங்ஸ்லி றொபட்

வைகாசி மாதம் என்றாலே வணக்க மாதம் என்ற சிந்தனை எம் மனக் கண்முன் வருவது வழக்கம். 13ம் நூற்றாண்டில் வாழ்ந்த அல்போன்ஸ்சோ வைகாசி மாதத்தில் மரியன்னைக்கு செலுத்தப்படும் விசேட பக்தி முயற்சிகள் பற்றி முதல் முறையாகக் குறிப்பிடுகின்றார்.

தற்போது நடைமுறையில் உள்ள வணக்க மாத பக்தி முயற்சி எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்பதில் பல்வேறு கருத்துகள் உள்ளன. இதில் முக்கியமாக ப்ரெட்றிக் ஹொல்வெக் (Frederick Holweck) என்பவரின் கூற்றுப்படி உரோமையில் இருந்த இயேசு சபை துறவிகளின் கல்லூரிகளில் கல்விகற்ற மாணவர்களின் அவநம்பிக்கையையும், துர்நடத்தையையும் சீர்படுத்தும் வண்ணம் அருள்பணி. லரோமியா (Latomia) என்பவர் வைகாசி மாதம் முழுவதும் மரியன்னைக்கு அர்ப்பணித்து செபிப்பதாக வாக்குப்பண்ணினார் என்று சொல்லப்படுகின்றது. உரோமையில் இருந்து இப்பக்தி முயற்சி ஏனைய இயேசு சபை துறவிகளால் நிர்வகிக்கப்பட்ட கல்லூரிகளிலும் படிப்படியாக அனைத்து கத்தோலிக்க ஆலயங்களிலும் பின்பற்றப்பட்டதாக பதிவாகி உள்ளது. இத்தாலியில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பக்தி முயற்சி படிப்படியாக பிரான்ஸ் நாட்டிலும், பெல்ஜியம் நாட்டிலும் சூடு பிடித்துள்ளது.

1965ம் ஆண்டு திருத்தந்தை ஆறாம் பவுல் மே மாதம் (Mense Maio) என்ற சுற்றறிக்கையில் வருடாந்த வணக்க மாத பக்தி முயற்சிகளில் விசேட மன்றாட்டுக்களைச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தார். இந்த விசேட மன்றாட்டுக்களில் இரண்டு முக்கிய காரணங்களை மனதிருத்துமாறு கேட்டுக்கொண்டார். 1) 1965ம் ஆண்டு கூட்டப்பட்ட இரண்டாம் வத்திக்கான் சங்கம் பல தடைகளையும் சவால்களையும் தாண்டி வெற்றி நடை போடவேண்டும் என்ற கருத்து. 2) பல்வேறு நாடுகளுக்கு இடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளும் ஆயுத முன்னெடுப்புகளும் சுட்டிக்காட்டும் போர் ஆபத்தில் இருந்து உலகைக் காப்பாற்றும் வண்ணம் மரியன்னையின் பரிந்துரையை நாடி நிற்க வேண்டும் என்பதாகும். இவ்வாறு அமைதியின் அரசியாகிய மரியன்னையின் பரிந்துரையால் உலகில் அமைதி பேணிக் காக்கப்படும் என்ற நம்பிக்கையை திருத்தந்தை விதைத்தார்.

திருத்தந்தையின் சுற்றுமடலின் மேற்படி பின்புலத்தில் இப்போது ஆரம்பித்து இருக்கின்ற வணக்க மாதம் எமது கவனத்தை ஈர்க்க வேண்டியதொன்றாக இருக்கின்றது. சித்திரை 21ம் நாள் ஆரம்பித்த கோரக் கொலைகளும், அதன்பின் நடைபெற்று வருகின்ற தேடுதல்கள் வெளிக்கொணரும் கண்டுபிடிப்புகளும் மென்மேலும் மனக் கலக்கத்தையும் பீதியையும் உண்டாக்கி இருக்கின்றன என்பது நிதர்சன உண்மை. அதன் கோர வெளிப்பாடுகள் எமது அன்றாட வாழ்வில் பல மாற்றங்களையும் முன்னெச்சரிக்கைகளையும் ஏற்படுத்தி உள்ளன. அன்றாட மற்றும் வழமையான சமய சடங்குகளைக்கூட சரிவர நிகழ்த்த முடியாத துர்ப்பாக்கிய நிலையே தாண்டவமாடுகிறது.

எனவே இந்த மாதம் முழுவதும் நம் நேசத் தாயை நோக்கி அபயக் குரலெழுப்புவோம். நேசத் தாயே, யுத்த அபாயங்களில் இருந்தும் அழிவுகளில் இருந்தும் எம்மைக் காப்பாற்ற தக்க தருணங்களில் பாதுகாவலியாக இருந்தது போல இன்றும் இனிவரும் காலங்களில் எமக்கு உதவியாக வாரும் என்று உருக்கத்தோடு மன்றாடுவோம். அம்மா மரியின் அரவணைப்பில் எம் குடும்பங்களையும் நமது தேசத்தையும் அர்ப்பணிப்போம். வெகு விரைவில் நம்மைச் சூழ்ந்துள்ள இருள் மேகம் கலையவும், நமது அன்றாட வாழ்வுக்கு இயல்பு நிலை திரும்பவும் அன்னையின் பரிந்துரையில் நம்பிக்கை வைப்போம். அன்னையின் பாசமுள்ள மக்களாக வாழ்வோம்.

## வைகாசி 2019 மறைமாவட்ட நிகழ்வுகள்

04.05.2019 சனிக்கிழமை: நற்கருணை ஆண்டவருடன் 12 மணித்தியாலங்கள்.
05.05.2019 ஞாயிற்றுக்கிழமை
: பாஸ்கா காலம் 3ம் ஞாயிறு.
: தேசிய சிறிய கிறிஸ்தவ குழும (அன்பிய) ஞாயிறு.
: நிலாவெளி புனித யோசேப்பு ஆலய வருடாந்தத் திருவிழா.
: மூதூர் - கங்கை புனித பேதுரு ஆலய வருடாந்தத் திருவிழா.
07.05.2019 செவ்வாய்க்கிழமை
: குருக்களுக்கான மாதாந்தத் தியானம்.
10.05.2019 வெள்ளிக்கிழமை
: குடும்ப அப்போஸ்தலம் - திருமண முன் ஆயத்தக் கருத்தரங்கு.
11.05.2019 சனிக்கிழமை: குடும்ப அப்போஸ்லம் - திருமண முன் ஆயத்தக் கருத்தரங்கு,
: மரியாயின் சேனை - கியூரியாக் கூட்டம்.
: கி. வா. சமூகம் - மாதாந்த நற்கருணை ஆராதனை.
12.05.2019 ஞாயிற்றுக்கிழமை
: பாஸ்கா காலம் 4ம் ஞாயிறு.
14.05.2019 செவ்வாய்க்கிழமை
: திருத்தூதரான புனித மத்தியாஸ் - விழா.
18.05.2019 சனிக்கிழமை
: மறைமாவட்ட மேய்ப்புப்பணிச் சபை - நிர்வாக சபைக் கூட்டம்.
: புனித வின்சன்ட் டி பவுல் ஆலோசனை சபை - மாதாந்தக் கூட்டம்.
: திருப்பாலத்துவ சபை - ஊக்குநருக்கான கூட்டம்.
19.05.2019 ஞாயிற்றுக்கிழமை: பாஸ்கா காலம் 5ம் ஞாயிறு.
: சாம்பல்தீவு புனித வேளாங்கண்ணி ஆலய வருடாந்தத் திருவிழா.
25.05.2019 சனிக்கிழமை: மறைமாவட்ட செபமாலைப் பேரணி.
26.05.2019 ஞாயிற்றுக்கிழமை: பாஸ்கா காலம் 6ம் ஞாயிறு
: பாலையூற்று புனித லூர்தன்னை திருத்தல வருடாந்தத் திருவிழா.
: சிறிய கிறிஸ்தவ குழும (அன்பிய) பங்குத் தரிசிப்பு.
31.05.2019 வெள்ளிக்கிழமை : புனித மரியா எலிசபெத்தைச் சந்தித்தல் - விழா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் - 22

# நல்லாசிரியர் : ஆளுமையும் ஆன்மீகமும்

அருட்தந்தை எஸ். அன்ரனி பொன்சியன் அமதி (BTh,B.A. (Hons), PGDE, MEd)



## நல்லாசிரியருக்கான சன்மானம் (பரிசு)

நல்லாசிரியர் பலனை எதிர்பார்க்காமல் தனது கடமையைச் செய்ய வேண்டும் எனக் கடந்த அத்தியாயத்தில் கூறியிருந்தேன். ஆனால் நல்லாசிரியருக்கான சன்மானம் தரத்திலும் தொகையிலும் குறைவு படாமல் கிடைக்கும் என்பது எனது அசையாத நம்பிக்கை மட்டுமல்ல, அனுபவமுமாகும். ஏறக்குறைய 20 வருட கல்விப்பணியின் சன்மானத்தை அங்காங்கே அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்.

குறைந்த ஊதியத்தோடும் இடமாற்றம் கிடைக்கும் போதெல்லாம் எவ்வித மறுப்பும் சொல்லாமல் வெளிமாவட்டங்களுக்கு குடும்பத்தோடு இடம்பெயர்ந்து, வசதிவாய்ப்பற்ற அதிபர், ஆசிரியர் விடுதிகளில் குடியிருந்து மாலைநேர இலவச வகுப்புக்கள் எடுத்துப் பணி செய்த நல்லாசிரிய சமூகத்தை இன்று காண்பது மிக அரிது.

தற்போது ஆசிரியர்களின் ஊதியம் ஓரளவு நியாயமானதாகவும், லீவு போன்ற ஏனைய சலுகைகளும் கிடைக்கின்றன. தற்போது சமூகத்தில் நிலவும் "ரியூசன் கலாச்சாரம்" பொன் முட்டையிடும் வாத்தாக மாறிவிட்டது. ரியூசன் வகுப்புக்களில் இன்றைய ஆசிரியர்கள் கணிசமான வருமானத்தைப் பலரும் கொழுத்த வருமானத்தை வேறு சிலரும் பெறுகின்றனர். தங்கள் பாடசாலை மாணவர்களையே ரியூசன் வகுப்புக்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும், வற்புறுத்தியும் அழைக்கின்ற ஆசிரியர்களும் உள்ளனர். இடமாற்றத்தை அரசியல் செல்வாக்காலும் ஏனைய அதிகாரத்தாலும் பிற்போட்டும், ரத்து செய்தும் ஒரே பாடசாலையிலேயே நீண்டகாலமும், அருகிலுள்ள பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் செல்பவர்களும் உள்ளனர். இவையெல்லாம் ஆசிரியரொருவருக்கு உண்மையான, நிரந்தரமான மனத்திருப்தியை கொடுக்க மாட்டாது.

தனது அன்றாடக் கடமைகளை அர்ப்பணிப்புடன் நேர்த்தியாய்ச் செய்யும் நல்லாசிரியருக்குக் கிடைக்கும் ஆத்ம திருப்தியே பெறுமதி மிக்க சன்மானமாகும். மாணவர்களை அறிவிலும், ஒழுக்கத்திலும், ஆன்மீகத்திலும் வளர்த்தெடுப்பதன் மூலம் கடவுளுக்குப் பணிபுரிகின்றேன் என்ற மனப்பான்மையோடு சேவையாற்றும் நல்லாசிரியருக்குக் கிடைக்கும் ஆத்ம திருப்திக்கு அளவே கிடையாது.

ஒரு ஞானி கூறுவதைப் போல "நான் கடவுளையும் ஆசிரியரையும் ஒரே சந்தர்ப்பத்தில் சந்திக்க நேர்ந்தால் முதலில் ஆசிரியர்க்குத் தான் வாழ்த்துக் கூறுவேன். ஏனெனில் கடவுளை நோக்கிப் போகும் பாதையை காட்டி நான் வழி தவறிப் போகாமல் காப்பாற்றியவர் ஆசிரியரே. எவ்வளவு உயர்ந்தோர் சபையிலும் மாணவரின் உள்ளத்தில் தன் ஆசானே உயர்ந்தவராய் இருப்பார். மாணவர்களின் மனம் கவர்ந்தவராக இருப்பது நல்லாசிரியருக்குக் கிடைக்கும் சன்மானமே.

மாணவரிடமிருந்து கிடைக்கும் இன்னுமொரு சன்மானமும் உள்ளது. கற்பித்த மாணவர்கள் பரீட்சையில் சித்தியடையாமல், சமூகத்தில் உயர் பதவியில் இல்லாமல் இருக்கலாம். நல்லாசிரியர் ஒருவரின் அன்பும், இரக்கமும் ஆளுமையும் மாணவரின் உள்ளத்தில் ஆழமான பதிவுகளை விட்டுச் செல்லும். பாடசாலை வாழ்வு முடிந்து பல வருடங்களாகியிருக்கும் ஆசிரியரும் ஓய்வு பெற்றிருப்பார். திடீரென ஒருநாள் ஒருவர் நல்லாசிரியரின் பாதங்களைத் தொட்டு வணங்குவார். அந்தத் தொடுகையில் அன்பு கலந்த நன்றியோடு கூடிய மரியாதை இருக்கும். இதுவும் பெரிய சன்மானமே.

எல்லாவற்றிற்கும் மேலான சன்மானமொன்று உண்டு. நல்லாசிரியர் தனது மாணவர் நலன்கருதி கடவுளுடன் சேர்ந்து கடவுளுக்காகப் பணிபுரிகின்றார். அவரைக் கடவுள் மறப்பதேயில்லை. இறைவனின் பிள்ளைகளை உருவாக்கும் பணியில் பல துன்பங்களையும் சவால்களையும் சந்தித்து அர்ப்பணிப்போடு பணிசெய்த ஆசிரியர் இறைவனோடு மறுமையில் வாழும் சன்மாத்தைப் பெறுகின்றார். நல்லாசிரியர்கள் அனைவரும் மறுஉலக வாழ்வில் சுவர்க்க சிம்மாசனத்தை அலங்கரிப்பவர்களாவர். இவ்விதத்தில் புனித பவுலடிகளாரின் விசுவாச அனுபவம் பொருத்தமாக அமையும்.

"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன். என் ஓட்டத்தை முடித்து விட்டேன்....... இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது நேரிய வாழ்வுக்கான வெற்றி வாகையே. அதை இறுதிநாளில் ஆண்டவர் எனக்குத் தருவார்.
(2திமோ 4 :7-8)

நிறைவுற்றது.....

நன்றி

*கடந்த இரு வருடங்களாக எனது கட்டுரைக்கு களம் அமைத்துத் தந்த "திருமலைத்தீபம்" நிர்வாகத்திற்கு எனது நன்றிகள்.*

அருட்பணி. S. அன்ரனி பொன்சியன்

---

## திருமண பந்தத்தில் பொன்விழா காணும்
## இராஜேஸ்வரன் கிருபைராணி
## தம்பதிகளை வாழ்த்துவோம்

26. 05. 1969

இறைவனது சந்நிதியில்
இணைந்திட்ட தம்பதிகள்
இராஜேஸ்வரன் (சந்திரன்) கிருபைராணி
சொந்தங்கள் பந்தங்கள்
சுற்றங்கள் புடைசூழ
சொர்க்கத்தில் நிச்சயித்த
பந்தத்தில் இணைந்திட்டீர்
கறையேதுமில்லாத கனிவான வாழ்வுடனே
குறைவில்லாக் குழந்தைப் பேறுகள் ஐந்து கண்டீர்
காலத்தின் சக்கரத்தில்
கலங்காத மனங்கொண்டு
ஞாலத்தில் புகழ் பூத்த
நிலையான வாழ்வு பெற்றீர்
ஆயிரம் காலத்துப் பயிரென்று
ஆன்றோர்கள் பாடி வைத்த
அருமையான பந்தமதில்
அரைநூற்றாண்டு வாழ்ந்து
நிறைவான வரங்கள் பெற்றீர்
எத்தனைதான் இடர்வரினும்
அத்தனையும் தகர்த்தெறிந்து
நித்திலம் போற்ற வாழ்ந்த
நிந்தனை நான் வணங்குகின்றேன்
நோய்நொடிகள் நீங்கி என்றும்
இறையாசி பெற்றவராய்
பல்லாண்டு நிலையாய் வாழ
மகிழ்வுடனே வாழ்த்துகிறேன்.




திருமதி. சுகிர்தா ஜெகதீசன்
மூதூர் - 06

---

## அன்னையர் தின நல்வாழ்த்துக்கள்



என்
விழிகளில் அழுதிட
இதழ்களில் சிரித்திட
இமைகளில் உறங்கிட
இம்சையை இரசித்திட
வெற்றியில் களித்திட
தோல்வியில் துவண்டிட
முகத்தில் மகிழ்ந்திட
சித்தத்தை செதுக்கிட
உதிரத்தை துடைத்திட
உயிருடன் கலந்திட
இன்பத்தைப் பெருக்கிட
இன்னலைக் களைந்திட
இறைவனால் பரிசளிக்கப்பட்ட
இனிய தேவதை நீ.....
அம்மா,
உனக்கு நான் பட்ட கடனதை
எத்தனை பிறவி எடுத்தும்
தீர்க்க முடியாத நிலையில்
ஒன்று மட்டும்
உறுதி செய்கிறேன்....
உன்
உயிர்த்துளியாகக் கருதி
எனக்கு நீ ஆற்றியவைகளை
மறந்திடும் நாளொன்றில்
இந்த மகளுக்கு
இவ்வுலகம் வைத்திடும்
பெயர் பிணம்!!!!

ரெ. மேரி ரொஷானி
இலிங்கநகர்

---

## சிந்தனைக்கு



உள்ளத்தில் உயரிய சிந்தனை
வேண்டுமா?
உன்னத பொன் ஏட்டைக் கையிலெடு
வாழ்வினைச் சிறப்பாய் வாழ்ந்திட
வழி வேண்டுமா?
வாய்மையின் வார்த்தையினை உம்
வாழ்வில் ஏற்றிடு
பொறாமை, எரிச்சல், கோபம்
இவற்றால் உம் உளம்
பாதிக்கப்படுகிறதா?
அயலவனை அன்பு செய்
ஆணவம் தலைதூக்குகிறதா?
அன்னையின் ஜெபமாலையைப் பற்றிக்
கொள்
செல்லும் பாதை தெரியாது
தடுமாறுகிறாயா
ஆண்டவன் ஆலயம் தேடி வா
வாழ்வில் உயர்வடைய
வார்த்தையினை வாழ்விற் கொள்
வார்த்தையே உம் வாழ்வின்
விளக்காய் ஒளிரும்.

A. ஹரிசா
திரு இருதய ஆண்டவர் ஆலயம்
இருதயபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார்த்தை வழி வாழ்வு



**வார்த்தை:**

எபிரேயர்மடல் கூறுகிறது:

"தூய்மையை நாடுங்கள், தூய்மையின்றி எவரும் ஆண்டவரைக் காணமாட்டார்" (எபிரேயர் 12:14).

**விளக்கம்**

இங்கு மனிதர்கள் கடவுளைக் காண்பதிலுள்ள நிபந்தனை முன்வைக்கப்படுகின்றது. கடவுளைக் காணவேண்டுமா தூய்மை உள்ளவனாக/உள்ளவளாக இரு என்பதேயாகும் அவ் நிபந்தனை.

தூய்மை அல்லது புனிதம் குறித்து விவிலியமும் பல்வேறுபட்ட சமய, உலக இலக்கியங்களும் பேசுகின்றன.

1.மத்தேயு நற்செய்தியாளர் தமது நற்செய்தியின் அடி நாதமாகிய மலைப்பொழிவின் பேறுகளுள் ஒன்றாக தூய்மையினை பயன்படுத்துகின்றார்: "தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்" (மத்தேயு 5:8).

2."எனக்கெனத் தூயவர்களாக இருப்பீர்களாக! ஏனெனில், ஆண்டவராகிய நான் தூயவராயிருந்து நீங்கள் என்னுடையவர்களாக இருக்கும்படி உங்களை மக்களினங்களினின்று பிரித்தெடுத்தேன" (லேவியர் 20:26) என்று கூறி தூய்மை வாழ்வுக்கு நம்மை அழைக்கின்றது.

3."நீ இஸ்ரயேல் மக்களிடம் கூறவேண்டியது: தூயோராய் இருங்கள். ஏனெனில் உங்கள் கடவுளும் ஆண்டவருமாகிய நான் தூயவர்!" (லேவியர் 19:3) எனக்கூறி தூய்மை வாழ்வு இறைவனின் அழைப்பு என சான்று பகர்கின்றது.

4."கடவுளுக்கு அடுத்தது தூய்மை Cleanliness is next to Godliness' என்கின்ற ஆங்கில சொற்றொடரினை முதன்முதலாக மெதடிஸ்த திருஅவையின் அருட்திரு ஜோன் வெஸ்லி 1778ஆம் ஆண்டு தமது மறையுரையில் பயன்படுத்தினார். அதுவே இன்று ஆங்கிலத்தில் பிரசித்தி பெற்ற சொற்றொடராகவும் உள்ளது.

5."மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன், ஆகுலநீரபிற" எனும் வள்ளுவப் பெருந்தகையின் குறளோவியம் கூறுவது யாதெனில் மனத்தில் குற்றம் இல்லாதவன் ஆகுதலே எல்லா அறங்களுக்கும் மூலமாகும். மற்றவை ஆரவார கட்டுகளேயாம்.

**வினாக்கள்**

எனது தூய்மை வாழ்வினைக் குறித்து நான் என்ன சொல்லிவிடமுடியும்? தூய்மை வாழ்வினைக் குறித்த இன்றைய யதார்த்தங்கள் யாவை?

- எனது திருமண புனிதத்துவ வாழ்விற்கு, பிரமாணிக்கத்திற்கு தூய்மையுள்ளவனாக/ தூய்மையுள்ளவளாக இருக்கின்றேனா?
- எமது குருத்துவ, துறவற அர்ப்பண வாழ்வின் தூய்மைக்கு, புனிதத்துவ அழைப்பிற்கு பிரமாணிக்கம் உடையவர்களாக இருக்கின்றோமா?
- எமது சகோதர நட்பிலும், அயலவர் அன்பிலும் புனிதம் பேணுகின்றோமா?
- எமது ஒழுக்கவியல் வாழ்வில் திருச்சபையின் படிப்பினைக்கும், கற்பித்தலுக்கும் பிரமாணிக்கமாக நடக்கின்றோமா?
- காவியுடையும், வெள்ளையுடையும் அணிவதால் புனிதம் வந்து விடுகின்றதா?
- ஊழலும், கையூட்டும் மலிந்து நிறைந்து காணப்படும் உலகில் புனித வாழ்விற்கு இடம் உண்டா?
- கறைபடிந்த கரங்களுடன் உலாவருகின்ற பொல்லாத அரக்கப் பேர்வழிகள் நிறைந்த மானிட வாழ்வில் தூய்மைக்கு இடமுண்டா?

**நிகழ்வு**

விடுதலைப்பயணம் 3ஆம் பிரிவில் விடுதலை வீரர் மோசே தன் மாமனார் இத்திரோவின் மந்தைகளை மேய்த்து வந்தார். மேய்த்துக்கொண்டு ஒரேபு மலைக்கு வந்தார். அப்போது ஆண்டவரின் தூதர் எரியும் முட்புதரில் அவருக்கு தோன்றினார். முட்புதர் எரிந்தாலும் தீய்ந்து போகவில்லை. ஏன் அவ்வாறு நடக்கவில்லை என்பதனை பார்ப்பதற்காக மோசே அதனருகே செல்ல முயன்றார். அப்போது ஆண்டவர் அவரையழைத்து " இங்கே அணுகி வராதே, உன் பாதங்களிலிருந்து மிதியடிகளை அகற்றிவிடு, ஏனெனில், நீ நின்று கொண்டிருக்கிற இந்த இடம் புனிதமான நிலம்" என்றார். இது நமக்கு கூறுவது யாதெனில் தூயவரைக்காண, சந்திக்க உன்னில் தடையாகவுள்ள உன் அசுத்தத்தை அகற்றிவிடு என்பதாகும்.

**செய்தி**

இன்று அகக்காரணிகளும், புறக்காரணிகளும் நமது தூய்மையினை சிதைக்கின்றன. அவற்றுள் புறக்காரணிகளாக வீதியில் வீறிட்டுப் பாய்கின்ற வாகனங்களின் நச்சுப் புகைகள், காற்றினில் கலக்கின்ற தொழிற்சாலைகளின் அசுத்த வாயுக்கள், அன்றாடக் கழிவுகளால் நிரம்பி வழியும் குப்பைகள், குடிநீரில் கலக்கின்ற நச்சுத் திரவங்கள், வயல் மற்றும் பயிர்நிலங்களில் தெளிக்கப்படுகின்ற கிருமிநாசினிகள், அதிகூடிய பொலீத்தீன் பாவனை என்று அடிக்கிய வண்ணமே செல்லலாம்.

மறுபக்கத்தில் அகக்காரணிகளாக நமது சிந்தனை, சொல், செயல் போன்றவற்றை சிதைக்கின்ற காரணிகளை பட்டியலிடலாம். மகாத்மாகாந்தியின் அறையினுள் காணப்பட்ட மூன்று குரங்குகளின் உருவம் கூறுகின்ற செய்தி யாதெனில் கண்களை மூடிய குரங்கு தீயதை பார்க்காதே என்றும், காதுகளை மூடிய குரங்கு தீயதைக் கேளாதே என்றும், வாயினை மூடிய குரங்கு தீயதைப் பேசாதே என்றும் நமக்கு அறைகூவல் விடுக்கின்றன. எனவே எமது புலன்களால் தீய்மையை நாடாமலும், தேடாமலும் இருப்போம். அதுமட்டும் போதாது தீமையினைப் புரிந்து நமது தூய்மையினை சிதைவடையாமலும் பார்த்துக் கொள்வோம்.

"நாம் உடலிலும் உள்ளத்திலும் மாசு எதுவுமின்றி நம்மையே தூய்மைப்படுத்துவோம். கடவுளுக்கு அஞ்சித் தூய வாழ்வில் நிறைவடைவோம்' (2 கொரிந்தியர் 7:1). நன்மையால் தீமையைவென்று தூயோராய் அழைப்புக்கேற்ப வாழ்வோம்.

பிறிதொரு பகிர்வுடன்
அருட்பணி நவாஜி

# வென்று விட்ட உயிர்கள்

வைகறை சிமிட்டி சிரிக்க
வையகம் கண் கலங்கி கண்ணீர் சிந்த
வாழ வேண்டிய பல உயிர்கள்
வாடி வதங்கி சிதைந்தன தரையில்

கொச்சிக்கடையில் குடி கொண்ட அந்தோனியாரே
மச்சக்கடையாய் மாறியதேன் உம் ஆலயம் தனிலே
பக்தர்களின் பரிதாப நிலை கண்டு - நீர்
பார்க்க முடியாமல் பரிதவித்தீரோ பதுவை முனியோரே

மீனவர் வாழும் நீர்கொழும்புதனிலே
மீளா துயர் குடிகொண்டதேன் அவ் ஊரிலே
வேரறுந்த மரமாய் வீழ்ந்த உம் அடியோர் நிலை கண்டு
வேதனை கொண்டு துடித்தீரோ வீர வேந்தரே

சிரித்து ஓடித்திரிந்த சித்திரை பூக்களே
சிறு நொடியில் சீயோன் ஆலயத்தில்
கருகி வாடி மாண்டதேன்
கல் நெஞ்சோனின் கண்ணியில் சிக்கியோ

விருந்தினராக எம் மண்ணுக்கு வந்த வெளிநாட்டவர்கள்
விருந்துண்ணாமலே மாண்டு மடிந்தனர் உணவகங்களிலே
என்று எம் மண்ணை நேசித்த சிலர்
இன்று எம் மண்ணுக்கே உரமானார்கள்

தன்னலம் கருதாமல் தாயக மக்கள் உயிர் காக்க
தம் உயிர் நீத்த எம் மண்ணின் வீரர்களே
தங்களின் சேவையை பார்த்து கண்ணீரோடு
தலை வணங்குதையா முழு தாயகமும்


கிறிஸ்தவரை கொன்றதாய் கூறுவோரே - கேளீர்
உயிர்த்த கிறிஸ்துவோடு ஒன்றித்து
வென்று விட்டனர் மண்ணகத்தை
சென்று விட்டனர் விண்ணகத்தை



ஆக்கம்
பிலிப் நளினா
அந்தோனியார் வீதி
செல்வநாயகபுரம்

# உறவுகள் மேம்பட.....

- நானே பெரியவன் நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள்.
- அர்த்தமில்லாமலும் பின்விளைவு அறியாமலும் பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள்.
- எந்த விஷயத்தையும் பிரச்சனையையும் நாசூக்காக கையாளுங்கள், விட்டுக்கொடுங்கள்.
- சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத் தான் ஆக வேண்டுமென்று உணருங்கள்.
- உண்மை எது? பொய் எது? என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள்.
- மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள்.
- அளவுக்கதிகமாய், தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள்.
- கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள்.
- அற்ப விஷயங்களைப் பெரிதுபடுத்தாதீர்கள்.
- உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்.
- மற்றவர் கருத்துக்களை, செயல்களை, நடக்கின்ற நிகழ்ச்சிகளை தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள்.
- மற்றவர்களுக்குரிய மரியாதையைக் காட்டவும், இனிய இதமான சொற்களை பயன்படுத்தவும் தவறாதீர்கள்.
- புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
- அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்.
- நீங்கள் சொல்வதே சரி, செய்வதே சரி என்று வாதாடாதீர்கள், குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள்.
- பிரச்சினைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத்துவங்க முன் வாருங்கள்.




ஆக்கம் :
D. இவாஞ்சலின்
குழந்தை இயேசு ஆலயம்,
உவர்மலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற மாத தொடர்ச்சி ..........

# வியப்புக்குரிய பல பற்றிய ஓர் கண்ணோட்டம்



- கருவிகளைப் பயன்படுத்துவதில் வல்லுநர்கள் மேற்கொள்ளும் மதிப்பீடுகளை உரிய காலத்தில் அறிந்து நேர்மையான மனச்சான்றின் குரலுக்கு ஏற்றவாறு அவற்றை கடைப்பிடிக்க வேண்டும்.
- நன்மை பயப்பனவற்றை முழுமையாக ஆதரிக்கவும் ஏற்ற உதவிகளுடன் தங்கள் மனச்சான்றை வழிநடத்திப் பயிற்றுவிக்க ஆவன செய்ய வேண்டும்.
- இளைஞர்கள் குறிப்பாக இவ்வகை கருவிகளை அளவோடும், கட்டுப்பாட்டோடும் பயன்படுத்தப் பழகிக் கொள்ள வேண்டும்.
- தீங்கு விளைவிக்கும் காட்சிகள் வெளியீடுகள் முதலியவற்றை இளைஞர்கள் பயன்படுத்துவதில் விழிப்போடு இருக்க வேண்டும்.
- பார்ப்பவை, கேட்பவை, வாசிப்பவை பற்றி ஆழ்ந்தறிய முயல வேண்டும்.
- நம்பிக்கை மற்றும் நல்லொழுக்கத்திற்கு ஊறுவிளைவிக்கும் காட்சிகள், வெளியீடுகள் போன்றவை இல்லத்தில் இடம்பெறாமல் பெற்றோர் விழிப்போடு இருக்க வேண்டும்.
- இவ்வகை தீய காட்சிகள் வெளியீடுகள் போன்றவை தங்கள் பிள்ளைகளுக்கு பிற இடங்களில் கிடைக்காமல் இருக்கும் வகையில் பெற்றோர் கண்ணும் கருத்துமாய் இருந்து விழிப்பாய் இருக்க வேண்டும்

### 02. சமூகத் தொடர்பு நிகழ்ச்சிகளை உருவாக்குவோரின் கடமைகள்

இக்கடமைகள் குறிப்பாக, இதழாளர், எழுத்தாளர், நடிகர், பொறுப்பாளர், விநியோகிப்போர், இயக்குபவர், விற்பனையாளர், திறனாய்வாளர் இன்னும் சமூகத் தொடர்பு நிகழ்ச்சிகளை தயாரிப்பதிலும் பரப்புவதிலும் பல்வேறு வகைகளில் பங்கு கொள்ளும் மற்றவர்களையும் சார்ந்ததாக அமையும்.

- தங்களுடைய கருத்து வெளியீட்டாலும் தாக்கங்களாலும் சமுதாயத்தை நன்மைக்கோ அல்லது தீமைக்கோ இட்டுச் செல்பவர்கள் என உணர வேண்டும்.
- பொருளியல், அரசியல், கலை மதிப்பீடுகளைப் பொது நன்மையுடன் முரண்படாதவாறு அமைப்பது இவர்களின் பொறுப்பு.
- இப் பொறுப்பினை நன்முறையில் நிறைவேற்ற வேண்டும்.
- தங்கள் கலைப் பணிகளிலும், கடமைகளிலும் அறநெறிக் கோட்பாடுகளை மதித்துப் போற்றுமாறும், தேவையானால் தங்கள் கலைத் துறையில் சில நெறிமுறைகளை கடைபிடிக்கவும் அவசியமானது.
- சமயத் தொடர்பான நிகழ்ச்சிகள் தகுதிவாய்ந்த வல்லுநர்களிடம் ஒப்படைக்கப்பட்டு உரிய மரியாதையுடன் அப்பணி நிறைவு செய்யப்படுகின்றதா என்பதை கவனிக்க வேண்டும்.

### 03. நாட்டு அதிகாரிகளின் கடமைகள்

- செய்தி அறிவதற்கு உரிய முறையான உண்மைச் சுதந்திரத்தை பேணிப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இவர்களுக்குரியது.
- சமயத்தையும் பண்பாட்டையும் உயர் கலைகளையும் அவர்கள் பேணி வளர்க்க வேண்டும்.
- தொடர்புக் கருவிகளை பயன்படுத்துவோரின் சுதந்திரத்தை பேண வேண்டியது இவர்கள் பொறுப்பாகும்.
- இளைஞருக்கு மிகவும் பயன்தரக் கூடியனவாக இருந்தும் வேறு விதத்தில் செயல்படுத்த முடியாமல் இருக்கும் திட்டங்களை நிறைவு செய்ய வேண்டும்.
- பொது ஒழுக்கத்திற்கும் சமூக முன்னேற்றத்திற்கும் பெருங்கேடு நேராமல் கவனிக்க வேண்டும்.
- முறையாகவும் விழிப்புணர்வோடும் சட்டங்களை இயற்றி அவற்றை திறமையாக செயற்படுத்த வேண்டும்.
- குடிமக்களின் பொதுநலனில் முறையாக ஈடுபடுவது அதிகாரிகளின் கடமையாகும்.

இவ்வாறு சில விதிமுறைகளை பிரகடனப்படுத்தினதன் பின்பு 1983ம் ஆண்டு திருச்சபை சட்டத்தொகுப்பில் எண் 822-832 சமூகத் தொடர்புக் கருவிகள் பற்றியும் குறிப்பாக நூல்கள் தொடர்பாக சட்டங்கள் அமைக்கப்பட்டன. இங்கு குறிப்பாக எண் 822-823 ஆகியவை தொடர்புக் கருவிகள் மனித மற்றும் கிறிஸ்தவ மனநிலையால் உயிரூட்டப்படுமாறு கிறிஸ்தவ விசுவாசிகள் ஒத்துழைக்க கடமைப்பட்டிருக்கிறனர் என்பதை வலியுறுத்துகின்றது.

எனவே திருஅவை சமூகத் தொடர்பு சாதனங்களின் அவசியத்தையும் அதனூடாக கிறிஸ்தவ விழுமியங்களின் பங்களிப்பினையும் கருத்தில் கொண்டு செயல்படுகின்றது. இவற்றினூடாக நற்செய்தி அறிவிக்கும் பணியிலும் இக்கருவிகளைப் பயன்படுத்துகின்றது. எங்களுடைய கடமைகளை உணர்ந்தவர்களாய் செயல்படுவோம்.

தொகுப்பு :
அருட்சகோ. பே. எமர்சன் றாகல்
இறையியல் பீடம்
கண்டி தேசிய குருமடம்

# உயிர்ப்பு நாளிலே கொடுமை

அருட்பணி N.C. அருள்வரதன்



இறைமகனார் இயேசுவின்
உயிர்ப்பின் பெருவிழா
உலகறிந்த பெருவிழாவே
அந்தோ பரிதாபம்
அநீதியின் உச்சங்கள்
ஆர்ப்பரித்துக் குண்டுகளாய்
ஆலயங்களுள்ளே
வெடித்துச் சிதறியதால்
வாழ்வின் இழப்புக்கள் எத்தனையோ

இனவாதமா மதவாதமா
யார் எதைச் செய்தாலும்
கடவுளே அவர்களை
அழித்தொழிப்பார் உண்மையே

ஆண்களென்றும் பெண்களென்றும்
குண்டுகளை வெடிக்க வைத்து
ஆலயங்களை அழித்தோரை
ஆண்டவரே முன்வந்து
அழித்தொழிப்பார் பாருங்கள்

பெற்றோர் மறைந்தார்கள்
பிள்ளைகளும் மறைந்தார்கள்
உற்றார் உறவுகளென்று
எத்தனைதான் மறைந்ததுவோ

வழிபாட்டுத் தலங்களுக்குள்
வன்முறைகள் கட்டவிழ
மறைந்து விட்ட உறவுகளை
மறவாமல் நினைவு கூர்வோம்
ஆன்மாக்கள் அமைதி பெற
ஆண்டவர் துணைபுரிவார்.

வேண்டாத செயல்களாலே
வீணழிவைத் தந்தோரை
காட்டியே உலகறிய
காடையரின் வேட்டைகளை
அம்பலமாக்கியே
கொடுமைக்குத் தண்டனைகளை
கொடுப்பார் இறைவன் உண்மையே



# கடுகு சிறிதென்றாலும்.......

குட்டிக்கதை ஒன்று

Fr. NC

ஆண்டு மூன்றிலே படிக்கும் மாணவி ஒருவர் மிகவும் திறமைகள் நிறைந்தவர். பாட்டுப் படிப்பார். கனீரென்ற சத்தம். பேச விட்டால் எந்தத் தடையுமின்றி அப்படிப் பேசுவார். எல்லோருக்கும் ஆச்சரியம். சின்னஞ்சிறிய பராயத்திலே இத்தனை திறமைகள்.

சொல்வார்களல்லவா "கடுகு சிறிதென்றாலும் காரம் பெரிதென்று" அது இப்பிள்ளையிலே தெரிகின்றதல்லவா?

# என் இயேசு கண்ணீருக்குப் பதில் தருகிறார்



இறைவன் படைத்த குழந்தை ஒன்று
இறப்பின் வாசலிலே நின்ற வேளை
வாழ்வில் எல்லாம் முடிந்ததென்று எண்ணி
புலம்பி அழுத வேளை
ஊரார் பார்த்து இறந்திடுவாள்
எனக் கூறும் செய்தி கேட்டு
தள்ளாடித் தடுமாறி ஓடினாள்
சாவின் இருள்சூழ் பள்ளத்தாக்கின் எல்லை வரை
கண்ணீரே உணவானது வேதனையே வாழ்வானது
எங்கிருந்து வந்ததோ நான் அறியேன்
கலங்காதே மகளே என்ற ஒரு குரல்
அஞ்சினேன் கலங்கினேன் யாரென வினவினேன்.
நானே நானே என்ற குரல் திடம் கொள் மகளே என்றது
வாழ்வு தரும் வார்த்தையதை கேட்ட - நானும்
திடம் கொண்டேன் தேற்றினேன் என்னை - நானே
உன்னதரின் உடனிருப்பை உணர்ந்து கொண்டேன்
உன்னதரின் ஊழியர்கள் ஆறுதல் வார்த்தைகளால் எனைத்தேற்ற
வாழும் காலமதை அதிகமாக்க வேண்டி
எனக்காய் மன்றாட வேண்டி நின்றேன்
எசேக்கியாவின் வாழும் காலமதை அதிகமாக்கிய
ஆண்டவரை அனுதினமும் வேண்டி நின்றேன்
நான்கு நாள் நாற்றம் எடுத்த இலாசரின்
இறந்த உடலை உயிர் பெறச் செய்தவரை
இன்று வரை என் துன்ப வேளையிலே நோக்கி கூப்பிட்டேன்
இறப்பின் வாசல் வரை சென்ற - என்னை
காத்த கர்த்தர் நாமம் - அதை
கடைசி காலம் வரை சாட்சியாய் அறிவித்து
ஆண்டவரின் பாதம் சென்றடைவேன் பாவி நானும்

சு. கௌசல்யா
இல - 216 / 12
சுடரொளி ஒழுங்கை,
அன்னை ஆலய வீதி,
பாலையூற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிவிலியம்



பாடல்கள் பல உண்டு
படிப்பினையைத் தரும் பாடல் "திருப்பாடல்"

மொழிகள் பல உண்டு
படிக்க வேண்டிய மொழி "நீதிமொழி "

காலங்கள் பல உண்டு
சிறந்த காலம் "தவக்காலம்"

சட்டங்கள் பல உண்டு
நாம் கடைப்பிடிக்க வேண்டியது "திருச்சட்டம்"

மாலைகள் பல உண்டு
ஆசீர் பெறும் மாலை "செபமாலை"

பலிகள் பல உண்டு
சிறப்பான பலி "திருப்பலி"

வார்த்தைகள் பல உண்டு
வாழ்வு தரும் வார்த்தை "வேத வார்த்தை"

செய்திகள் பல உண்டு
உண்மைச் செய்தி "நற்செய்தி"

இவை அனைத்தும் அடங்கியது தான் "திருவிவிலியம்"

ஆக்கம்
பிலிப் நளினா
செல்வநாயகபுரம்


## கற்றுக் கொடு



சமூகம் எங்கே செல்கிறது
சாதனை படைக்கவா? - இல்லை
சரிந்து விழும் சமூக வலைத்தளங்களுக்கு
பிறந்திட்ட குழந்தை தவழ்ந்திடும் முன்னே
அலறியடிக்கும் அலைபேசியை அழுத்தக்
கற்றுக் கொடுக்கும் - அன்னையே
அன்பிற்காய் பிறந்து எம் பாவத்திற்காய்
மரித்த உன்னதரின் உயரிய
அன்னையின் மகிமை ஜெபமாலையைப்
பற்றிட கற்றுக் கொடு - உம்
பிள்ளை அகிலத்தையே வென்றிடுவாள்

J. டனுசிகன்
திரு .இருதய ஆண்டவர் ஆலயம்
இருதயபுரம்

## லூக்கா நற்செய்தி




மானிடர்க்கு மீட்பளித்து
மறுவார்த்தை கொடுத்து
பெண்மை மகத்துவத்தை
கொடுத்து நற்செய்தியாளராய்
ஏழைக்கும் பாமரர்க்கும்
இறைமகனை வெளிப்படுத்த வரும்
தூய ஆவியாரை துணிவுடன்
எடுத்துரைத்த புனித லூக்கா
நற்செய்தியாளர் சிறந்தவரே

T. தட்சியா
திரு .இருதய ஆண்டவர் ஆலயம்
இருதயபுரம்

## திருவிவிலியம்




உலகிற்கு ஒளியாய்
உயிருக்கு உரமாய்
வாழ்விற்கு வழியாய்
பலம் தரும் மருந்தாய்
துன்பத்தில் ஆறுதலாய் -
உற்ற துணையின் புகழிடமாய்
உயிரூட்டம் அளிக்கும்
உன்னத சக்தியே வார்த்தையின்
வடிவான திருவிவிலியம்

P. கௌதம்
திரு இருதய ஆண்டவர் ஆலயம்
இருதயபுரம்

# அன்றாட வாழ்வில் தத்துவங்கள்




## 4. குறிக்கோள்

குறிக்கோள் என்பது ஒரு மனிதனுடைய இறுதியான நோக்கத்தை அடையும் வழியிலே ஒருவனை வழிநடத்திச் செல்லும் ஒன்றாகும். ஒவ்வொரு மனிதனுக்கும் குறிக்கோள் இருக்க வேண்டும்.

குறிக்கோள் ஒருவனுக்குள் இருந்து அவனது திறமைகள், ஆற்றல்களைத் தன்வயப்படுத்துகின்றது. அதுமட்டுமல்ல தன்னோடு தொடர்புடைய மனிதனின் பிற ஆசைகளையும் தன் பக்கம் ஈர்த்து, அதற்கு மாறானவற்றை ஒதுக்கித்தள்ளும் சக்தி வாய்ந்தது. ஒருவனது செயல்கள் யாவுமே அவனது குறிக்கோளின் சாயலைப் பெறுகின்றது எனலாம்.

உயர்ந்த குறிக்கோள், தாழ்ந்த குறிக்கோள் என இரண்டு உள்ளன. ஒரு மனிதனின் குறிக்கோள் மனிதனுக்கு வெளியே அவனை விடப் பெரிதாக இருக்க வேண்டும்.

ஒருவனது குறிக்கோள் தனது உடலை வளர்ப்பது தான் என்றால் அது உயர்ந்த குறிக்கோள் ஆகாது. காரணம் உடல் வலிமை இருந்தால் மட்டும் போதாது. அவனுக்கு புத்தித் திறனும் தேவை. ஒருவன் ஒரு சிறந்த கலைஞனாக இருக்கலாம் ஆனால் எதற்கும் உணர்ச்சி வசப்படுபவனாக இருந்தால் என்ன பயன்? அறிஞராகப் படித்துப் பட்டம் பெற்றிருக்கலாம். ஆனால் மற்றவரோடு பழகத்தெரியாதிருந்தால் என்ன பயன்? ஆகவே மேற்குறிப்பிட்ட ஒரு நோக்கத்தை மட்டும் குறிப்பதாக இருந்தால் உயர்ந்த குறிக்கோளாகாது.

பணம் சம்பாதிப்பது மட்டும் எனது குறிக்கோளாக இருந்தால் அது எந்த வழியிலும் சம்பாதிக்கலாம் என்பது உயர்ந்த குறிக்கோளாகாது. உயர்ந்த குறிக்கோள் என்பது தன்னால் தனது குடும்பத்துக்கும், வாழும் சமுதாயத்துக்கும் பயன்படக்கூடிய ஒன்றாக இருத்தல் வேண்டும். சமுதாய நன்மை உயர்ந்த குறிக்கோளில் அடங்குகிறது.

ஒருவன் ஆன்மீக நலனில் உயர்ந்து வளர்ந்தால் அவனது பிற நலன்களாகிய உடல் நலம், அறிவு நலம், உணர்வுப் பக்குவம் போன்றவைகள் வளர ஆரம்பிக்கும். அப்படிப்பட்டவனது வாழ்வில் நீதியும், நேர்மையும், உண்மையும், அன்பும், கடமை கண்ணியம் கட்டுப்பாடும் மேலும் பல உயர்ந்த பண்புகளும் வளரத் தொடங்கும். அப்படிப்பட்டவனது சிந்தனை, சொல், செயல் உயர்வுடையதாக இருக்கும்.

இளவயதிலிருந்தே பிள்ளைகள் நல்ல குறிக்கோளுடன் வளரப் பெற்றோர்கள் உதவ வேண்டும். இவ்வாறு உதவி, உரமிட்டால் பிள்ளைக்குக் குறிக்கோள் வளரத் தொடங்கும்.

"நம்மிடம் உறுதியான தீர்மானம் இருந்தால் மட்டும் குறிக்கோள் வைக்கவும். அதன் பின் அக்குறிக்கோளை அடைவதற்கான வழிகள் ஒவ்வொரு திசையிலும் தானே திறந்திருக்கும்" என்கிறார் எட்வட்ஸ்.

எமது வாழ்வில் உயர்ந்த குறிக்கோளுடன் வாழத் தீர்மானம் எடுப்போம். அதற்காக அயராது முயற்சி செய்வோம். எவ்வளவு தான் தோல்விகள், கஷ்டங்கள் வந்தாலும் சோர்ந்து விடாது முயற்சி செய்வோம். வாழ்வில் நிம்மதியாக வாழ்வோம்.

வண்டிச் சக்கரம் அசைய அச்சாணி அசைவதில்லை.
உலகம் அசைய இறைவனும் அசைவதில்லை.
பேனாவைக் காகிதத்தில் வைத்ததும் அது தானே எப்படி எழுதும்?
உன் கை அசைய வேண்டாமா?

உன் நிழலை மாற்ற நினைத்தால் முதலில்
உன்னையே நீ மாற்றிக் கொள்ள வேண்டும்.

உன் வீட்டு விளக்கால் அடுத்த வீட்டுக்காரன் ஒளி பெறக் கூடாது
என்பதற்காகக் கொளுத்திய விளக்கைக் கூரைக்குள் மறைக்காதே.

தொடரும்.........

## மனிதம் எங்கே செல்கிறது



அழுத குழந்தையை அரவணைக்கும்
தாய் அயர்ந்திடாது அலைபேசியில்
தவறி விழுந்தவன் உயிருக்குப் போராடும் - வேளை
உதவிக்கரம் கொடுக்க மறுக்கும் எம் கைகள்
செல் போனில் செல்(F)பியில்
துன்பத்தில், துயரத்தில் வாழ்பவனின்
தகவல், ஆறுதல் மொழி செல்போனில்
உற்றார் உறவுகள் சுற்றியிருக்கும் வேளை
ஊர்ந்து உற்று நோக்குவது - செல்போனை
மரண அறிவித்தலை முகநூலில் பார்த்ததும்
RIP என்னும் மூன்றெழுத்துடன்
முடித்து விடுகிறோம் - சிறந்திடா
வாழ்வினைச் செல்போனில் புதைத்திடுவோம்
இறந்திடா வரம் பெற இனிய
நற்செயல்களில் இணைந்திடுவோம்

E. லக்சன்
திரு இருதய ஆண்டவர் ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவந்த ஈஸ்டரும் புதிய மறைசாட்சிகளும்



புதியகாலை புதுப்பொலிவுடன் கதிரவனைக் காண, மனுக்குலத்திற்காக மனிதனாகி புனிதனான இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பின் மகிழ்வைக் கொண்டாட, உயிர்த்த ஞாயிறு காலைவேளை (21.04.2019) விசுவாசிகள் தயாரானார்கள். நாற்பது நாட்கள் தாம் மேற்கொண்டிருந்த உபவாசத்தினை முடித்துக்கொண்டு, உயிர்ப்பின் பெருவிழாவினை கொண்டாட பாஸ்கா பலியினில் இணைந்து உயிருடன் இயேசு எழுப்பப்பட்டார் என்ற மகிழ்வில் அவருடைய திருவிருந்தில் பங்கேற்ற அடுத்த தருணமே உயிர்த்த ஆண்டவருக்குள் மறைசாட்சிகளாக சங்கமித்துக்கொண்டனர் எமது சகோதர கத்தோலிக்கர். ஆம் ஈஸ்டர் சிவந்தது, விசுவாசிகள் புதிய மறைசாட்சிகளாக விண்ணகம் சென்றனர்.

கடந்த உயிர்த்த ஞாயிறன்று திருப்பலியில் பங்கேற்று இறைவார்த்தையை தமது வாழ்விற்கு வழியாக ஏற்றுக் கொண்ட மனநிலையில் ஆன்ம உணவான திருவிருந்தில் பங்கேற்ற பின்பு எமது கத்தோலிக்க விசுவாசிகள் குறிப்பாக கொச்சிகடை புனித அந்தோனியார் ஆலயத்திலும், நீர்கொழும்பு தூய செபஸ்தியார் ஆலயத்திலும் இயேசுவின் உயிர்ப்பில் மகிழ்ந்தோரின் இரத்தத்தால் இந்த வருட ஈஸ்டர் சிவந்துபோக, விசுவாசிகள் மறைசாட்சிகளானார்கள். மேற்கண்ட ஆலயங்களிலும் ஏனைய இடங்களிலும் கொடூரமான குண்டுவெடிப்பினால் இறந்தவர்களின் இறப்பு அநியாயமானது, இவர்கள் அப்பாவிகள், இது ஒரு தேவையற்ற மரணம், இக்கொடூரத்திற்கு யார் காரணம்? என்ற வாதங்களுக்கு அப்பால், நாம் சற்று சிந்தித்தால் இவர்களது மரணம் எமக்கு இன்று கூறுவது என்ன?

இந்த அருவருக்கத்தக்க செயற்பாடானது எமக்கு அரசியல் ரீதியான பல கேள்விகளை எம்மனதில் தோற்றுவிக்கின்ற அதேவேளை ஆன்மீக வழியில் ஒரு முக்கிய விடயத்தை உணர்த்தி நிற்கின்றது. ஈஸ்டர் தினத்தில் உயிர்த்த ஆண்டவருடன் சங்கமமான கத்தோலிக்க விசுவாசிகள் விபூதிப் புதனன்று, திருப்பலியில் பங்கேற்று தமது நெற்றிகளில் சாம்பலிட்டு, மண்ணால் படைக்கப்பட்ட நாம் மண்ணுக்கு திரும்புவது உறுதி என்பதை உணர்ந்ததனால் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை நம்பி மனந்திருந்தி வாழ முற்பட்ட பலரில் இவர்களும் உள்ளடங்குவர். கத்தோலிக்கர் என்ற வகையில் தவக்காலத்தின் நாற்பது நாட்களிலும் உண்ணா நோன்பிருந்து, பல செப, தப, தியாகங்களைச் செய்து, தமது மனித பாவ இயல்புகளுக்கு தம்மை மரணித்து இயேசுவோடு உயிர்த்தெழ ஆவலுடன் இருந்திருப்பர் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அதனால்தான் உயிர்த்த ஞாயிறு அன்று காலையிலேயே இறைவனுக்கு நன்றி கூறவும் அவர் புகழ் பாடவும் ஆலயம் நோக்கி சென்றனர். அன்புறவை வளர்க்கும் ஆண்டவரின் திருப்பலியில் அர்த்தமுடன் பங்கேற்றனர்.

ஆண்டவரின் பாஸ்கா மறைபொருளை எடுத்தியம்பும் திருப்பலியில் ஆர்வமுடன் பங்குபற்றினர். ஆண்டவரின் உயிர்ப்பு அவர்களுக்கு புதிய வாழ்விற்கான விண்ணகக் கதவுகளை திறந்துவிட்டது. தீயவனின் கொடூரம் கண்டிக்கத்தக்கது. அவனது வன்முறையும் நெஞ்சத்தின் ஆழத்திலிருக்கும் வன்மமும் எடுத்துரைக்க வார்த்தைகளற்றது. இருப்பினும், இந்த கொடுமையின் மத்தியிலும் "இன்றே நீ என்னோடு வான்வீட்டிலிருப்பாய்" என்ற இயேசுவின் வார்த்தைகள் இங்கு எமது உறவுகளின் காதுகளில் சங்கீதமாக எதிரொலித்திருக்கும். அத்தனை உயிர்களையும் இறைவன் தன்னுடன் விண்ணகத்தில் இணைந்திருப்பார். இந்த உறவுகளின் இரத்தத்தால் 2019ம் ஆண்டு ஈஸ்டர் தினம் சிவந்து போனது என்னவோ கசப்பான உண்மை. ஆனாலும், இவர்கள் அனைவரும் தமது விசுவாசத்தினை வாழ்வாக்க திருப்பலியில் கலந்து கொண்டவர்கள். ஆதலினாலேதான், இவர்கள் அனைவரும் புதிய மறைசாட்சிகளாகின்றனர். இவர்களது விசுவாச வாழ்க்கை மெச்சத்தக்கது. இவர்களது பாவங்கள் அந்த இடத்திலேயே கழுவப்பட்டு ஆண்டவரின் உயிர்ப்பில் பங்குதாரராயினர் என்பது மறுக்க முடியாத உண்மை.

இவர்களது இழப்பானது மனிதர்கள் யாராலும் ஈடுசெய்ய முடியாததொன்று என்பதற்கு மாற்றுக் கருத்து இல்லை. இவர்களால் எமது திருச்சபையில் ஏற்பட்ட வெற்றிடம் வேறொருவராலும் நிரப்பப்பட முடியாததொன்று. இவர்கள் தமது விசுவாச வாழ்வால் சான்று பகர்ந்த அத்தனை செயற்பாடுகளும் எமக்கு இழப்புக்களே. இருந்தாலும், தூய பவுலடிகளார் கூறுவார், கிறிஸ்துவின் அன்பிலிருந்து எம்மைப் பிரிப்பது எதுவுமில்லை. "வேதனையோ, நெருக்கடியோ, இன்னல், பட்டினி, ஆடையின்மை, இடர், சாவு" (உரோ 8:35) எதுவுமே எம்மை ஆண்டவரிடமிருந்து பிரிப்பதில்லை. மாறாக ஆண்டவருக்குள் நாம் இன்னும் ஆழமாக தஞ்சமடைய அவருக்குள் முடிவில்லா வாழ்வைக் காண எமக்கு வேண்டிய மன வலிமையும் நம்பிக்கையும் கிடைக்கின்றது. அன்னியரின் ஆதிக்கமும் அடக்கு முறையும், கீழ்த்தரமான அரசியல் சூழ்சிகளும், வன்மமும் வஞ்சகத் தன்மையும், குண்டு வெடிப்புக்களும் குதர்க்கங்களும் சாவினின்று உயிரோடு எழுப்பப்பட்ட எமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து தரும் வல்லமையால் தூசு போல துடைக்கப்பட்டுவிடும். இவை எவையுமே எம்மை இயேசுவினின்று பிரித்துவிடுவதில்லை.

குண்டுத் தாக்குதலால் எமது உறவுகள் வெறுமனே உதிர்ந்து போகவில்லை. மாறாக, விசுவாச வித்துக்களாக விதைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களின் விசுவாச உதிரம் உயிரோடு இருக்கும் எம்மை உரமூட்டுகின்றது. இயேசுவே ஆண்டவர், அவருக்காகவே வாழ்கின்றோம், அவருக்காகவே எம்மை எமது வாழ்வை அர்ப்பணிக்கின்றோம், அவரது அன்பின் படிப்பினைகளையே நாம் தவறாமல் எம் வாழ்வாக்கிக்கொள்வோம் எனும் மன உறுதியை எமது புதிய ஈஸ்டர் மறைசாட்சிகளும் உணர்த்தி நிற்கின்றனர்.

ஆதித்திருச்சபையிலும், இயேசுவில் விசுவாசம் கொண்ட மக்களை 10 பேரரசர்கள் தமது ஆட்சிக் காலத்தில் கொடூர வாளுக்கு இரையாக்கி விலங்குகளால் கிழிக்கப்பட்டு, கந்தகம் பூசப்பட்டு தீப்பந்தங்களாகவும் எரிக்கப்பட்டனர். தொடர்ந்தும் காலத்திற்கு காலம் பல நாடுகளில் கிறிஸ்தவர்கள் ஏனைய மதவாதிகளால் கொல்லப்படுகின்றனர். இவ்வாறு ஒவ்வொரு முறையும் கிறிஸ்தவர்கள் வதைக்கப்பட்டபோதும், பல்லாயிரக்கணக்கானோர் கிறிஸ்தவத்தை தழுவிக்கொண்டனர். ஏனெனில் உயிர்த்த ஆண்டவரை அவர்கள் தம் வாழ்வில் அனுபவித்தனர். ஆண்டவரும் அவர்களுடன் அனுதினமும் பிரசன்னமாயிருந்தார். ஆதலால், பனிபோல் மறையும் இவ்வுலக வாழ்வுக்குள் எம்மைத் தொலைத்துவிடாமல் நித்தியத்திற்கும் இறைவனுக்குள் வாழும் மறுவுலக வாழ்விற்கு நாளாந்தம் எம்மைத் தயாரிக்கும் நாம் இறையுணர்வு மிக்கவர்களாக துன்புறும் உறவுகளுக்கு ஆறுதலாக இருப்போம். அவர்களுக்கு அருகிலிருக்க முடியாமல் போனாலும் அவர்களுக்காக தொடர்ந்தும் செபிப்போம். ஈஸ்டர் என்பது இயேசுவின் துன்பகரமான பாடுகள் மரணத்தைத் தொடர்ந்து வந்தது. இந்த பாஸ்கா மறைபொருளின் அடிப்படையிலேயே குறிப்பாக தூய மாற்கு தனது நற்செய்தியை எழுதியுள்ளார். தொடக்க கால கிறிஸ்தவர்கள் உரோமைய நீரோ அரசனினால் துன்புறுத்தப்பட்டபோது, துன்பத்தினூடாகவே வாழ்வு (உயிர்ப்பு) உண்டென்பதை உணர்த்துவதாக தனது நற்செய்தியில் கோடிட்டுக் காட்டியிருப்பது வரலாற்றில் பொய்த்துவிடவில்லை.


பாடுகளின் பாதையிலே பரமன் இயேசு தன்னைப் பார்த்து கண்ணீர் விட்ட எருசலேம் நகரப் பெண்களுக்கு, "எனக்காக அழவேண்டாம், மாறாக உங்களுக்காகவும் உங்கள் மக்களுக்காகவும் அழுங்கள்" (லூக் 23:28) என்று கூறினார். இன்றும் அதே வார்த்தைகளை இயேசுவும் எமது உயிர்த்த ஞாயிறன்று தமது விசுவாசத்தை வெளிப்படுத்திய வேளை உயிர் நீத்த - ஈஸ்டர் மறைசாட்சிகளான எமது உறவுகளும் கூறுகின்றனர். இன்று, எமக்கும் எமது வருங்கால சந்ததிக்கும் வரப்போகின்ற இன்னல்கள் துன்ப துயரங்களிலிருந்து எம்மைப் பாதுகாக்க இறைவனை நோக்கி அழவேண்டியவர்களாக இருக்கின்றோம். நாசகார சதிகாரரிடமிருந்து எம்மையும் எமது சந்ததியினரையும் காத்துக்கொள்ள வழிதேடவேண்டிய முக்கிய பொறுப்பில் நாம் ஒவ்வொருவரும் உள்ளோம்.

ஆகவே, நவநாகரீகம் வளர்ந்துவிட்ட இன்றைய காலகட்டத்தில், மனிதம் மரத்துப்போக, இறைவனின் இரக்கத்தை புறம் தள்ளிய மனிதர்கள் நம்மில் எத்தனைபேர்! அன்பு, மன்னிப்பு, பொறுமை, இரக்கம், பகிர்வு, நீதி, நேர்மை, வாய்மை, சமத்துவம் என்ற விண்ணக விழுமியங்களை இழந்து அடிப்படை மனிதப்பண்புகளையும் மறந்து பொய், களவு, சூது, காமவெறி, போட்டி, பொறாமை, பிறர் நற்பெயரைக் கெடுத்தல், வீண் சந்தேகம், பிரமாணிக்கமின்மை, குடி, போதைபொருள் பாவனை, கொலை, கொள்ளை, சிறுவர் பெண்கள் துஷ்பிரயோகம், விபச்சாரம், சண்டை, சச்சரவுகள், பிணக்குகள், இலஞ்ச ஊழல்கள் என சமூக அநீதிகள் மலிந்துபோன சமூகமாக மாறிவிட்ட இந்த மண்ணில், இறைவனின் இரக்கம் இன்னும் தீர்ந்து போகவில்லை. அதை நிறைவாகப் பெற்றுக்கொள்ள அனுபவிக்க இறைவன் உயிருடன் இருக்கும் எமக்கு தரும் கால அவகாசமும் சந்தர்ப்பமுமே இது.

ஆகவே, மனந்திரும்பிய வாழ்வை வாழ நாம் அனைவரும் அழைக்கப்படுகின்றோம் என்பதை உணர்ந்து வாழ்வோம். எமது கத்தோலிக்கரின் இரத்தத்தால் சிவந்து போன ஈஸ்டரின் புதிய மறைசாட்சிகளின் ஆன்ம சாந்திக்காகப் பிராத்திக்கும் அதே வேளை இயேசுவிற்குள் நித்திய வாழ்வை வாழ தகுதியுடையவர்களாக வாழ, மாற முயற்சிசெய்வோம். எமது விசுவாச வாழ்விற்கு பிரமாணிக்கமாக வாழும் கிறிஸ்தவர்களாக வாழ்வோம். உயிர்த்த இயேசு கிறிஸ்துவுக்குள் மனநிம்மதியடைவோம்.

**Rev. Sr.யோகா scjm**
**வவுனியா.**

# நூல்களே சிறந்த நண்பன்



"தொட்டணைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு"

என்றார் வள்ளுவர் பெருந்தகை. ஆம் மனித குலத்தின் மாண்பிற்கும், வெற்றிக்கும். எழுச்சிக்கும், உயர்விற்கும் உன்னத உரிய மார்க்கம் புத்தகங்களேயாகும்.

"எங்கே ஒரு நூலகம் திறக்கப்படுகின்றதோ, அங்கே ஆயிரம் சிறைக்கதவுகள் மூடப்படுகின்றன" என்றார் ஓர் அறிஞர். ஆம் உருவாகும் எதிர்கால சமுதாயத்தை நல்வழிப்படுத்தி நம்பிக்கையூட்டி வாழ வைக்கும் சிறந்த நண்பன் நூல்களேயாகும். "வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குகின்றது". ஆம் நூல்களை வாசிக்கும் போது ஒருவன் கல்வித்தரத்தையும் நுண்மதியையும் பெற்று நற்பிரஜையாக மாறி உலகை வெல்வதற்கு வழிகாட்டுகின்றது.

புத்தகங்களில் வாழ்க்கை வரலாறு, தத்துவம், பொதுஅறிவு, அறிவியல், இலக்கியம், கதைப்புத்தகம் என பலவகை உண்டு. நாம் அவற்றில் நல்லது எது? தீயது எது? என அறிந்து கற்றல் அவசியம். அன்னப்பறவை நீரை அகற்றி விட்டுப் பாலைக் குடிப்பது போல் நாமும் எமது வாழ்க்கைக்குப் பயன்தரக் கூடிய புத்தகங்களை பாவிப்பதே சிறந்ததாகும்.

"என்னை எந்தச் சந்தர்ப்பத்திலும் கைவிடாத நண்பன் புத்தகமே" என்றார் ஓர் ஆங்கில அறிஞர். புத்தகங்கள் எமது இரு கண்களைப் போன்றவை அவற்றைப் பாதுகாத்துப் படிப்பது எமது கடமையாகும். ஜவஹர்லால் நேரு ஒருநாள் ரெயில் பயணத்தின் போது ஒரு பெட்டி நிறைய புத்தகங்களை எடுத்துச் சென்றார். அதைப்பார்த்து வியந்த நேருவின் அபிமானி ஒருவர் நேருவிடம் இதற்கான காரணத்தை வினவினார். அப்போது அவர் கூறிய பதில் "நான் இவ்வளவு புத்தகங்களையும் கொண்டு செல்லும் போது இவ்வளவு நூலாசிரியர்களுடன் செல்வதாக உணர்கிறேன் என்றார். இதன் மூலம் புத்தகங்களின் விலைமதிக்க முடியாத பெறுமதியை நாம் உணரமுடிகின்றதல்லவா?. ஏழை விவசாயியின் மகன் ஆபிரகாம் இலிங்கன் இரவல் வாங்கிப் புத்தகத்தை படித்து, அமெரிக்க ஜனாதிபதியாக வரவில்லையா? நாமும் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் நூல்நிலையம் சென்று புத்தகங்களை வாசிப்போம், புதுவாழ்வு பெறுவோம்.

புத்தகங்களின் பெறுமதியையும், தேவையையும், மகத்துவத்தையும் உணர்ந்தே ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி சர்வதேச புத்தக தினம் கொண்டாடப்படுகின்றது. எனவே நல்ல புத்தகங்களை நலமுடனே வாசித்து, சிந்தித்து செயற்பட்டு வளமான வாழ்வை உருவாக்கி, வையகத்து வாழ்வாங்கு வாழ்வோமாக.

பிறிஜட் சுரேந்திரா
676, அன்புவழிபுரம், திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகெட் கரித்தாஸ் நிறுவனத்தினரின் தைமாதம் தொடக்கம் பங்குனி மாதம் வரையான செயற்பாடுகள்

## உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்தல்



"வறுமைக்கான காரணங்களைக் கவனத்திற் கொள்ளலும் விவசாயிகளுக்கான உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்தலும்" எனும் தலைப்பின் கீழ் அசேதன முறையிலான வீட்டுத்தோட்டப் பயிர்செய்கையினை ஊக்கப்படுத்தி அதன் மூலம் நஞ்சற்ற உணவினை உற்பத்தி செய்வதற்காக மக்களிடையே விழிப்புணர்வூட்டும் செயற்றிட்டமானது கடந்த 2018 மூதூர் பிரதேசத்தில் எட்டு கிராமங்களையும், தம்பலகமம் பிரதேசத்தில் இரு கிராமங்களையும் உள்ளடக்கியது. குடும்பங்கள், பாடசாலை மாணவர்கள், முன்பள்ளி பிள்ளைகள், பெற்றோர் அடங்கலாக சுமார் 2000பேரின் நலனுக்கு இத்திட்டம் வித்திட்டது. 2018ம் ஆண்டிற்குரிய இத்திட்டமானது பங்குனி மாதத்துடன் நிறைவடைந்தது.
அதுமட்டுமின்றி 2019ம் ஆண்டிற்குரிய திட்டத்தில் திருகோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேசத்திற்குட்பட்ட பத்து கிராமங்களிலுள்ள 2000 பயனாளிகளை உருவாக்கும் முயற்சியில் எமது பணியாளர்கள் தங்களது பணியில் ஈடுபடுகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## எகெட் கரித்தாஸ் நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட தைப்பொங்கல்



இராவணாசேனை அமைப்பின் ஏற்பாட்டில், திருகோணமலை எகெட் கரித்தாஸ் நிறுவனமும் கைகோர்த்து உழவர் திருநாளாம் தைப்பொங்கல் நிகழ்வை திருகோணமலை பேரூந்து தரிப்பு நிலையத்திற்கு அருகாமையில் கடந்த 20.01.2019 அன்று சிறப்பித்தன. இந்நிகழ்வில் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை, திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சுசந்த புஞ்சிநிலமே, கிழக்கு மாகாண பிரதம செயலாளர் திரு.அபய குணவர்த்தன, பிரதிப் பிரதம செயலாளர் பொறியியல் சேவை உட்கட்டமைப்பு கிழக்கு மாகாண கௌரவ மாணிக்கம் அவர்கள் என்போர் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## திருகோணமலை மாவட்ட பல்சமய ஒன்றியம்



எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் Amityதிட்டத்தின் பங்களிப்பின் மூலமாக திருகோணமலை மாவட்டத்தில் அனைத்து சமயத் தலைவர்களையும் உள்ளடக்கியதான ஒன்றியமொன்று கடந்த 26.01.2019 அன்று மாலை 3 மணியளிவில் ஜீபிலி மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல், இஸ்லாமிய ஜம்மியத்துல் உலமாதலைவர், பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் பிரதம குருமற்றும் சங்கமித்த பிரதம குரு ஆகியோர் கலந்து கொண்டனர். இவ் ஒன்றியத்தின் தலைவராக ஆயர் பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## எகெட் கரித்தாஸ் நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் செயலமர்வு



திருகோணமலை கரித்தாஸ் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கையில் அனைத்து மதங்களுக்கிடையிலும் சகிப்புத்தன்மை மற்றும் ஒற்றுமைக்கான ஒரு பொதுவான நோக்கை ஊக்குவிக்கும் திட்டம் 30.03.2019 சனிக்கிழமை காலை 9.30மணி தொடக்கம் மதியம் 12 மணிவரை கரித்தாஸ் நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.
இதில் 1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்நிறுவனமானது 41 ஆண்டுகள் தமது சமூகப் பணியில் காலடி எடுத்து வைத்துள்ளது. மேலும் திட்ட முகாமையாளர் திரு.G.A.பிரான்சிஸ் கூறுகையில் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களின் வழிகாட்டலே முக்கிய காரணம் என தெரிவித்தார். அத்துடன் திட்ட இணைப்பாளர் திரு.M.A.M.றிஸ்மி கூறுகையில் கரித்தாஸ் நிறுவனத்தின் இயக்குனர் அருட்பணி டன்ஸ்டன் பிரட்றிக் ஜோசப் அவர்கள் நலிவுற்ற மக்களை நேரில் சந்தித்து அவர்களுக்கான உதவிகளை மேற்கொண்டு வருவதாகவும் மேலும் கரித்தாஸ் நிறுவனத்தின் செயற்பாடுகள் பற்றியும் எமக்கு விளக்கம் அளித்தார் அதில்,

- □இலங்கையில் அனைத்து சமயங்களுக்கு இடையே பொதுவான புரிந்துணர்வை ஏற்படுத்துதல்
- □யுனிசெப் நிறுவனத்தின் சிறுவர் பாதுகாப்பு செயற்திட்டம்
- □மீள் குடியேற்றப்பட்ட மக்களுக்கான சுகாதார போசாக்கு நீர் வழங்கல் சேவை
- □கண்ணிவெடி அபாயக் கல்வியிலிருந்து சிறுவர்களையும் பொதுமக்களையும் பாதுகாத்தல்
- □நஞ்சற்ற வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையை மக்கள் மத்தியில் ஊக்குவித்தல்
- □பாதுகாப்பான வெளிநாட்டுப் பயணம்
- □இந்தியாவிலிருந்து மீள்குடியேறும் நோக்கத்துடன் தற்பொழுது திருகோணமலை மாவட்டத்திற்கு வருகை தந்த மக்களுக்கான அத்தியாவசிய உதவி வழங்கல்.
- □போலந்து நாட்டவர்களால் வழங்கப்படுகின்ற வறிய மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம்

போன்றன இடம் பெறுவதாக தெரிவித்தார். மற்றும் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்கும் போது,
எதிர்வரும் காலங்களில் எகெட் கரித்தாஸ் நிறுவனமானது போதைப் பொருட்களை தடைசெய்வதற்கான விழிப்புணர்வு செயற்திட்டங்களை கிராம மட்டத்திலும் பாடசாலை மட்டத்திலும் இளைஞர் யுவதிகளுக்கு மேற்கொள்ள திட்டமிட்டு இருப்பதாகவும் தெரிவித்தனர். இதில் தலைமைச் செயலகத்திலிருந்து திரு.தெய்வேந்திரராஜா அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சம்பூர் பெண்கள் மற்றும் சிறுவர் நிலைய திறப்பு விழா





யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் எகெட் கரித்தாஸ் நிறுவனத்தினரால் கட்டிக் கொடுக்கப்பட்ட சம்பூர் பெண்கள் மற்றும் சிறுவர் நிலையமானது, சிறுவர் பாதுகாப்புத் திட்டத்திற்கான இலங்கைக்கான பொறுப்பதிகாரி திரு.ரமீஸ் அவர்களின் தலைமையில் 22.02.2019 அன்று திறந்து வைக்கப்பட்டது. இதில் யுனிசெப் பிராந்திய சிறுவர் பாதுகாப்பு பொறுப்பதிகாரி திரு.அன்ருலாசரஸ், திருகோணமலை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கௌரவ ற.திலகரட்ண, எகெட் கரித்தாஸ் பணிப்பாளர் அருட்பணி டன்ஸ்டன் பிரட்றிக் ஜோசப், சிறுவர் நன்னடத்தை அதிகாரி, கிராம சேவை உத்தியோகத்தர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர், அதிபர், ஆசிரியர்கள் என்போர் கலந்து கொண்டனர். 30 வருட உள்நாட்டுப் போரின் பின்னர் இக்கட்டிடமானது சம்பூர் கிராம மக்களுக்கு கிடைத்த ஓர் வரப்பிரசாதமாகும் என சம்பூர் பிரதேச பொறுப்பதிகாரி கௌரவ ராஜபக்ஷ அவர்கள் குறிப்பிட்டமை சிறப்பம்சமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லூக்கா நற்செய்தி அதி 10 - 12 வரை

❖எவரும் பங்கு பற்றலாம்
❖போட்டோப் பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
❖போட்டியாளர்கள் சரியான விடையளித்தால் குலுக்கல் முறையில் பரிசு வழங்கப்படும்.

1ம் பரிசு 500/- 2ம் பரிசு 300/- 3ம் பரிசு 200/-

01. திருச்சட்ட நூலில் எழுதியிருப்பது என்ன? என திருச்சட்ட அறிஞரிடம் இயேசு கேட்டபோது அவர் கூறிய பதில் என்ன?

.............................................................................................
.............................................................................................
.............................................................................................
.............................................................................................
.............................................................................................

02. யோனா எம்மக்களுக்கு அடையாளமாய் இருந்ததாக லூக்கா நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது?

.............................................................................................

03. விழிப்பாயிருங்கள் ஏனெனில் நினையாத நேரத்தில் மானிடமகன் வருவார் என்பது பற்றிய உவமையை இயேசு கூறி முடித்த பின் அவரிடம் கேள்வி கேட்டவர் யார்?

.............................................................................................

04. "ஆண்டவரே, உமது பெயரைச் சொன்னால் பேய்கள் கூட எங்களுக்கு அடிபணிகின்றன" என யார் இயேசுவிடம் கூறியது?

.............................................................................................
.............................................................................................

05. மார்த்தா பற்பல பணிகளில் ஈடுபட்டு இயேசுவிடம் வந்து கூறியது என்ன?

.............................................................................................
.............................................................................................
.............................................................................................
.............................................................................................

06. "கவலை வேண்டாம்" என்ற பிரசங்கத்தில் இயேசு எந்த அரசனை உதாரணங்காட்டி கூறியுள்ளார்?

.............................................................................................

07. எருசலேமில் இருந்து எரிக்கோவுக்குச் சென்ற மனிதனை அடித்துக் குற்றுயிராய் விட்டுச் சென்ற போது கண்டும் காணாதவர்கள் போல் சென்றவர்கள் யார்?

.............................................................................................

08. "இடைவிடா செபம் இறைவனிடம் கேட்கப்படும்" என்பதற்கு இயேசு கூறிய உவமை எது?

.............................................................................................

09. "உம்மைக் கருத்தாங்கிப் பாலூட்டி வளர்த்த உம் தாய் பேறுபெற்றவர்" என யார் யாரைப் பார்த்துக் கூறியது?

.............................................................................................

10. "அறுவடையோ மிகுதி, வேலையாள்களோ குறைவு, ஆகையால் அறுவடைக்குத் தேவையான வேலையாள்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள்" என இயேசு யாரைப் பார்த்துக் கூறினார்?

.............................................................................................
.............................................................................................

11. இடைவெளிக்குப் பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக.
மக்கள் முன்னிலையில் என்னை ஏற்றுக் கொள்பவரை .............................. .............................. முன்னிலையில் ஏற்றுக் கொள்வார்.

12. எந்நகரங்களில் இயேசுவின் நற்செய்தியை பறைசாற்றியிருந்ததால் அம்மக்கள் சாக்கு உடை உடுத்தி சாம்பலில் உட்கார்ந்திருந்து மனம் மாறியிருப்பர்?

.............................................................................................

13. "மரியாவோ நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார், அது அவளிடமிருந்து எடுத்துக் கொள்ளப்படமாட்டாது" என யார் யாரிடம் கூறியது?

.............................................................................................

14. பரிசேயர் தாம் விரும்புவது எவை என இயேசு மக்களைப் பார்த்துக் கூறினார்?

.............................................................................................
.............................................................................................
.............................................................................................

15. இயேசுவைத் தம் வீட்டில் வரவேற்ற பெண் யார்? அவரின் சகோதரியின் பெயர் என்ன?

.............................................................................................

பெயர் : .............................................................................
பங்கு : .............................................................................
முகவரி: .............................................................................
.............................................................................

முடிவுத்திகதி : 15. 06. 2019

## வாழ்வின் வெற்றி

அருட்பணி. N.C. அருள்வரதன்

இதோ கவிதை வரிகளை சரியாக வடிவமையுங்கள்

இதோ கவிதை வரிகள் ..........
சரியாக வடிவமையுங்கள்

❖ எங்கும் அமைதியை மறவாமலே
❖ ஏற்ற வழிகளைத் தேடுவோமே
❖ போற்றும் வழிகளாய் அவை அமைய
❖ புனிதமாம் நிலைகளைத் தெரிவோமே
❖ கடினமாம் பாதைகள் என்றாலும்
❖ நிறைந்த நன்மைகள் தருமாதலால்
❖ நாம் செல்வோம் வெற்றி நமதாகுமே
❖ நன்மையின் வழிகளை மறவாமலே
❖ வெற்றியின் நிலைகளைக் கண்டடைய
❖ மனச்சோர்வோ பின்னடைவோ இல்லாமலே

எல்லோரும் சரியாக வடிவமைத்தால்
குலுக்கல் மூலம் தெரிவு இடம்பெறும்


1ம் இடம் 500/-
2ம் இடம் 300/-
3ம் இடம் 200/-
முடிவுத்திகதி 15.06.2019

## கவிதை வரிகளை சரியாக வடிவமைத்தல் போட்டி

## புதியவைகள் மலரவே

**சரியான கவிதை வரிகள்**

புத்தாண்டே வருக எங்கும்
புதுப்பொலிவைத் தருகவே
முடிந்த ஆண்டோடு
முடியட்டும் அனைத்துத் துயர்களும்
மலர்ந்துள்ள புதிய ஆண்டு
விளைவிக்க வேண்டும் புதியவற்றை
அன்புறவு மனஅமைதி நியாய வாழ்வுகள்
நிலைபெறவே புதிய ஆண்டு உதவ வேண்டும்
முடிந்தவைகள் முடியட்டும்
இனியும்' அவைகளைப் பேசாமல்
நல்லவைகள் நாட்டிலே விளைய
நம்பிக்கை கொண்ட மனங்களோடே
நாம் கேட்போம் ஒன்றாகி இறைவனையே



பங்குபற்றியவர்கள் : 23 பேர்
மிகச் சரியாக வடிவமைத்தவர்கள் : 2 பேர்

பரிசுத்தொகை சமமாக வழங்கப்படுகிறது

ரூபா 500/-
திருமதி. ஜோ. அனஸ்ரி அலராணி
இல : 101, காந்திநகர்,
அன்புவழிபுரம்

ரூபா 500/-
டொ. தர்சிகா
ஆலய வீதி,
சகாயபுரம், மூதூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி முடிவுகள்

**கோவிலில் சிறுவன் இயேசு**

பங்குபற்றியவர்கள் : 26 சிறுவர்கள்

பரிசுக்குரியவர்கள்



1ம் பரிசு 500/=
கொலனா
பாரதிபுரம்
அன்புவழிபுரம்

2ம் பரிசு 300/=
நேமிநாதன் சரணியா
5ம் வட்டாரம்,
கும்புறுப்பிட்டி

3ம் பரிசு 200/=
சு. துசேந்தினி
இல 216/12,
சுடரொளி ஒழுங்கை,
பாலையூற்று

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 32
## பிலிப்பியர் அதி 1 - 4 வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ■ | து | | | ■ | நி | | | ■ | ■ |
| ம | | | | | | | | | |
| ■ | வெ | ■ | ம | | | | | | ■ |
| | | ■ | | | | | | எ | |
| | | வ | | | | | | | |
| | | ■ | ■ | | | நி | ■ | ■ | |
| | | | | | | | | ந | |
| இ | ■ | தொ | | | | | | | ஆ |
| ■ | தா | | | | | | | ■ | ■ |
| சி | | | | | | | | | ■ |

01. தொட......க மு.....ல்
02. து.......வு
03. மனி...... உருவி..... தோன்.....
04. தாழ்.....க்......ரிய
05. இ....... அ.........தி
06. ந......பய......கள்
07. நி.........மை
08. வ..... வரு.......கும்
09. சி........ப்ப.....டு........ளேன்
10. எல்....... நாவு.......
11. ஆதா.........மான
12. வெற்........ வா.....
13. மனநி.......வோடு
14. நி..........வு

பெயர்:.................................................

முகவரி:.................................................

பங்கு:.................................................


முடிவுத்திகதி 15.06.2019

## இவ்வாண்டுக்கான சிறப்புப் போட்டி முடிவுகள்
### புனித லூக்கா நற்செய்தி அதிகாரம் 01 - 03

பங்குபற்றியவர்கள் : 89 பேர்

பரிசுக்குரியவர்கள் : 04பேர்
எனவே பரிசுத்தொகை 250 /- சமமாக வழங்கப்படுகின்றது

01. தனராஜா செலின்
இல : 427, அன்புவழிபுரம்
திருகோணமலை



02. றெ. நிவேதா
குவாடலூப்பே பங்கு

03. ல. வினுசியா
690, பாரதிபுரம்,
கன்னியா,
அன்புவழிபுரம்

04 திருமதி . ஜோ. அனஸ்ரி அமலராணி
இல: 101, காந்தி நகர்,
திருகோணமலை

**பங்குபற்றிய அனைவருக்கும்**

**வாழ்த்துக்களும், நன்றிகளும்.**

## சிந்தனைத் துளிகள்

மாற்றங்கள் என்ற ஒன்றே இந்த உலகில் இறைவன் தோற்றுவித்த மாறாத நியதி. வாழ்க்கையில் இதை நாம் புரிந்து வாழ பழகி விட்டால் யாருடைய மாறுதலும் நம்மை பலமிழக்கச் செய்யாது.

எதைக் கண்டும் அச்சம் கொள்ளத் தேவையில்லை. உன் மனசாட்சியைத் தவிர உன்னை முற்றிலுமாக புரிந்து கொண்ட சிறந்த நண்பனும் அதுவே. உன்னைப் பற்றி முழுவதுமாக தெரிந்து வைத்திருக்கும் இரகசிய உளவாளியும் அதுவே.

கொடுப்பது சிறிது என்று தயங்காதே
பெறுபவருக்கு அது பெரிது
எடுப்பது சிறிது என்று திருடாதே
இழப்பவருக்கு அது பெரிது

எதிர்மறை எண்ணங்களை மாற்றாதீர்கள் அகற்றுங்கள்

வாழ்க்கையில் இரண்டு வாய்ப்புக்கள் உள்ளது. ஒன்று உன்னால் மாற்ற முடியாதவற்றை ஏற்றுக் கொள்வது அல்லது ஏற்றுக் கொள்ள முடியாதவற்றை மாற்றிக் காட்டுவது

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி
## அன்னை மரியாள்

- **பாலர் முதல் தரம் 5 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.**
- **திருமலைத்தீபத்தில் தரப்படும் படத்திற்கு நிறம் தீட்டுதல் வேண்டும். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.**
- **1,2,3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்**

**1ம் பரிசு - 500/= 2ம் பரிசு - 300/= 3ம் பரிசு - 200/=**



பெயர் ..................................................

முகவரி ..................................................

பங்கு ..................................................

தரம் ..................................................

முடிவுத் திகதி 15.06.2019


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25/05

# பங்குத்தரிசிப்பு - கிறிஸ்து அரசர் ஆலயம், கன்னியா







மறைக்கல்வி நிலையச் செயற்பாடுகளுள் ஒன்றான பங்குத்தரிசிப்பு 31.03.2019 அன்று கன்னியாப் பங்கில் நடைபெற்றது. இத்தரிசிப்புக்கு மறைக்கல்வி ஆணையக இயக்குனர் அருட்பணியாளர். T. கிங்ஸ்லி றொபட் அவர்களும், மறைக்கல்வி நிலைய பணியாளர்கள் குழுவும் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அன்றைய நாளில் திருப்பலியுடன் அனைத்து நிகழ்வுகளும் ஆரம்பமானது. திருப்பலியை மறைக்கல்வி ஆணையகத்தின் இயக்குனர் ஒப்புக் கொடுத்தார். திருப்பலி நிறைவில் இயக்குனர் தந்தை அவர்களால் பங்குத்தரிசிப்பு பற்றிய விளக்கமும், வருவதன் அவசியமும் பங்கு மக்களுக்கும், மாணவர்களுக்கும் சிறு விளக்கமாகக் கொடுக்கப்பட்டது. அதன்பின் மறைக்கல்வி நிலைய பணியாளர்களால் மாணவர்களுக்கான போட்டிகளும், விளையாட்டுக்களும் இவ்வாண்டின் கருப்பொருள்களை (புனித லூக்கா நற்செய்தி, சமூக விழிப்புணர்வு, விவிலிய வாசிப்பு) மையமாக வைத்து நடாத்தப்பட்டது.

மாணவர்களும், ஆசிரியர்களும் உற்சாகத்தோடு இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள். அன்றைய நாளில் பங்கு மக்களும், மாணவர்களும் மகிழ்ச்சியாய் இருந்ததை காணக் கூடியதாக இருந்தது.

அன்றைய பங்குத்தரிசிப்பு நல்ல முறையில் செயல்முறைப்படுத்தப்படுவதற்கும், ஏனைய விடயங்களில் எமக்கு பக்கபலமாய், இன்முகத்துடன் எங்களை வரவேற்று உபசரித்த பங்குத்தந்தை பங்கு மக்களுக்கும் எமது இதயங்கனிந்த நன்றிகள்.

**ஆண்டவரது ஆசீர் என்றும் அனைவருக்குள்ளும் இருக்கட்டும்.**




## புனித அன்னை தேரேசா நினைவிடத்தில் திருத்தந்தை


அன்னை தெரேசா நினைவிடத்தில் திருத்தந்தை (Vatican Media)

தற்போது Skopje இல் புனித அன்னைத் தெரேசா நினைவிடம் இருக்கும் இடத்திலே இயேசுவின் புனித இருதய ஆலயம் இருந்தது. இந்த ஆலயம், 1963ம் ஆண்டு இடம்பெற்ற நிலநடுக்கத்தால் சேதமடைந்தது. எனவே அந்த இடத்தில் Skopje நகர நிர்வாகம், புனித அன்னைத் தெரேசா நினைவிடத்தை எழுப்பியுள்ளது. இந்த இடத்தை ஒவ்வோர் ஆண்டும் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் பார்வையிடுகின்றனர். இந்த இடத்திற்கு மே 07 செவ்வாய்க்கிழமை சென்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை அன்னைத் தெரேசா அருட்சகோதரிகள் குழுவின் தலைவர் வரவேற்றார்.

**ஆதாரம் : வத்திக்கான் வானொலி**

### பிலிப்பைன்ஸ் தலைநகரம் மணிலாவில்

## தொழிலாளர்கள் மேற்கொண்ட ஊர்வலம்


பிலிப்பீன்ஸ் தலைநகர் மணிலாவில் தொழிலாளர்கள் மேற்கொண்ட ஊர்வலம்

மே 1ம் திகதி புதனன்று சிறப்பிக்கப்பட்ட உலகத் தொழிலாளர் நாளையொட்டி பிலிப்பீன்ஸ் தலைநகர் மணிலாவில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் மேற்கொண்ட ஓர் ஊர்வலத்திற்கு அதரவு தந்த ஆயர்கள், தொழிலாளர்களின் வேலைவாய்ப்பை உறுதி செய்வது பிலிப்பீன்ஸ் அரசு அவர்களுக்கு வழங்கக் கூடிய பெரும் பரிசு என்று அந்நாட்டு ஆயர்கள் கூறியுள்ளனர்.

நாட்டுக்குள் நல்ல வேலை வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டால், நம் நாட்டவர் பிற நாடுகளுக்கு வேலை தேடிச் செல்வதும், அதன் விளைவாக குடும்பங்கள் பிரிவதும் தடுக்கப்படும் என்று பிலிப்பீன்ஸ் ஆயர் பேரவையின் குடிபெயர்ந்த மக்கள் பணிக்குழுவின் தலைவர் ஆயர் ரூபெர்த்தோ சாந்தோஸ் அவர்கள் UCA செய்தியிடம் கூறினார் .

**ஆதாரம் : வத்திக்கான் வானொலி**

## பழி வாங்கும் செயல்கள் வேண்டாம்



ஆசியாவில் காழ்ப்புணர்வு மற்றும் சித்திரவதைகளால் துன்புறும் அனைவரோடும் ஒருமைப்பாட்டுணர்வைத் தெரிவித்துள்ள ஆசிய ஆயர்கள் சகிப்பற்ற தன்மை. வெறுப்பு, பாகுபாடு, வன்முறை மற்றும் அநீதிகளின் அனைத்து வடிவங்களையும் நற்செய்தியின் பெயரால் தாங்கள் எதிர்ப்பதாகக் கூறியுள்ளார்கள்.

**ஆதாரம் : வத்திக்கான் வானொலி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆண்டவரே உமது வலக்கையால் எம்மைக் காப்பாற்றும் (தி. பா: 138:7)**